வடமொழி நூற்களில்
சைவ சித்தாந்தம்

(பகுதி I)

தத்துவப்பிரகாசமும்
அதன்
இரு உரைகளும்

டாக்டர் கோ. சுந்தரமூர்த்தி

சர்வோதய இலக்கியப் பண்ணை,
32/1, மேல வெளி வீதி,
மதுரை - 625001.

© டாக்டர் கோ. சுந்தரமூர்த்தி

முதற்பதிப்பு ஜூலை, 1977

விலை ரூ. 3.00

5703
063256

விற்பனை உரிமை : சர்வோதய இலக்கியப் பண்ணை

அச்சிட்டோர் : பெரியநாயகி அச்சகம், மதுரை.

Name of the book : Vadamoli Nurkalil
Saiva Siddhantam
Part I
(Tattvaprakasamum
atan iru uraihalum)
(Saiva Siddhanta in
Sanskrit texts.
Part I
Tatvaprakasa and its
two Commentaries)

Author : Dr. G. Sundaramoorthy

Sales Right : Sarvodaya Ilakkiya Pannai
32/1, West Veli Street,
Madurai-625001
India.

Printed at : Periyanayaki Achagam, Madurai.

tasmai srigurave namah

முன்னுரை

தமிழில் சைவ சித்தாந்தத் தத்துவத்தை விளக்குவதற்கு மெய்கண்ட சாத்திரங்கள் பல உள்ளவற்றைத் தமிழர்கள் நன்கு அறிவார்கள். சைவ சித்தாந்தத்தை விளக்க ஆங்கிலத்திலும் தமிழிலும் தற்கால அறிஞர்கள் எழுதிய பல நூற்கள் உள்ளன. ஆனல் சமஸ்கிருதத்தில் சைவ சித்தாந்தக் கருத்துக்களை விளக்குவதற்குப் பல நூற்கள் உள்ளன என்பதைத் தமிழர்களில் மிகப் பெரும்பாலோர் அறியாதிருப்பர் என்பது திண்ணம். தற்கால அறிஞர்களால் ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதப்படும் நூற்களில் வடமொழிச் சைவ சித்தாந்த நூற்கள் பற்றிய குறிப்பு காணப்படுவது மிக அருமை. இதற்கு முக்கியமாக இரு காரணங்களே உள்ளன. இன்று சைவ சித்தாந்தம் அறிந்த அறிஞர்களில் பெரும் பகுதியினருக்கு வடமொழிப் பயிற்சி இல்லாதது ஒரு காரணம். வடமொழி அறிஞர்களில் 99 சதவிகிதத்தினருக்குச் சைவ சித்தாந்தத்தில் ஈடுபாடு இல்லாதிருப்பது மற்றொரு காரணம்.

இதன் விளைவாகச் சைவ சித்தாந்தம் பற்றிக் கூறும் நூற்றுக்கணக்கான வடமொழி நூற்கள் அழிந்து போய் விட்டன. சில ஐம்பது, அறுபது ஆண்டுகளுக்கு முன் பதிப்பிக்கப்பட்டு இன்று தேடியலைந்து வாங்க வேண்டிய நிலையில் உள்ளன. வடமொழியில் இருந்தாலும் சைவ சித்தாந்தம் பற்றிக் கூறும் நூற்கள் **தமிழர்களின் சொத்து** என்பதை நாம் மறக்க முடியாது; மறக்கக் கூடாது. அப்படி மறந்தால் மீதமுள்ள வடமொழிச் சைவ சித்தாந்த நூற்களும் விரைவில் மறைந்தொழிந்து விடும்.

சைவ சித்தாந்தத்தில் பற்றுள்ள அறிஞர்கள் செய்ய வேண்டிய மிக முக்கிய பணிகள் சில உள்ளன.

1. வடமொழியில் சைவ சித்தாந்தம் பற்றிக் கூறும் அனைத்து நூற்களையும் ஒன்று திரட்ட ஒரு புது முயற்சி மேற் கொள்ளப்பட வேண்டும்.
2. திரட்டப்பட்ட நூற்களை முறையாக ஆராய்ந்து பதிப்பிக்க வேண்டும்.
3. இந்நூற்களை ஒவ்வொன்ருக மொழி பெயர்க்க வேண்டும்.
4. மொழி பெயர்ப்புடன் கூட அவற்றின் கருத்துக்களைச் சுருக்கியும் விளக்கியும் பல நூற்கள் எழுதப்பட வேண்டும்.
5. வடமொழி மரபில் வந்த சைவ சித்தாந்த நூற்களுக்கும் மெய்கண்ட சாத்திரமரபு நூற்களுக்கும் இடையேயுள்ள ஒற்றுமை வேற்றுமை துல்லியமாக ஆராயப்பட வேண்டும்.

இப்படிப்பட்ட முயற்சிகளில் முனைந்து நின்ருல் தான் இத்தகைய வடமொழி நூற்களை நாம் மேலும் மறையாமல் காப்பாற்ற முடியும். என்னுடைய உருக்கமான இந்த வேண்டுகோளைப் படித்த சைவ சித்தாந்தப் பெரியார்கள் இதனைப் பற்றித் தீவிரமாக எண்ணிஞல் அது எனக்குப் பெரிய மனச் சாந்தியைத் தரும். ஆதி சங்கரர், இராமானுசர், வேதாந்த தேசிகர், அப்பைய்ய தீட்சிதர் போன்ருேருடைய நூற்களைப் பதிப்பித்து ஆராய தனிப்பட்ட தாபனங்கள் உள்ளது போல வடமொழிச் சைவ சித்தாந்த நூற்களைப் பதிப்பித்து ஆராய ஒரு தனிப்பட்ட தாபனத்தை உருவாக்குவது சிறந்தது. தமிழகப் பல்கலைக் கழகங்கள் இம்முயற்சியில் ஈடுபடலாம் அல்லது இம்முயற்சிக்கு ஆதரவு தரலாம்.

சைவ சித்தாந்தத்தில் எனக்குள்ள பற்று காரணமாக வடமொழிச் சைவ சித்தாந்த நூற்களைச் சேகரிக்கும் ஆர்வம் சில ஆண்டுகளாக எனக்கிருந்தது. இதன் விளைவாக நான் வடமொழிச் சைவ சித்தாந்த நூற்களைச் சேகரிக்கும் பணியில் ஓரளவு வெற்றி பெற்றுள்ளேன். மேலும் பல நூற்கள் எனக்குத் தேவைப் படுகின்றன. இதனைப் படிக்கும் அன்பர்களிடம் இத்தகைய நூற்கள் எவையும் இருந்தால் அவற்றை எனக்கு

விலேக்கோ, அன்பளிப்பாகவோ, கடனுகவோ தர முன் வந்தால் அது பெரிய உதவியாக இருக்கும். சம்பந்தப்பட்ட நண்பர்களே என்னுடன் தொடர்பு கொள்ளும்படி வேண்டு கிறேன்.

சைவ சித்தாந்தம் என்பது வெறும் தத்துவமல்ல. சைவ சித்தாந்தத்தை அறிய ஆகமங்களேயும், அவற்றையொட்டிய பத்ததிகளேயும் அறிய வேண்டும். பாண்டிச்சேரி பிரஞ்சுத் தாபனமும், தென்னிந்திய அர்ச்சகர்கள் சங்கமும் சில ஆகமங்களே அச்சிடுவது பற்றி மிகவும் மகிழ்ச்சி. இவர்களுடன் கூட ஆகமங்களேயும், பத்ததிகளேயும், நான் முன்பு குறிப்பிட்ட சைவ சித்தாந்தத் தாபனங்களே ஏற்றுக் கொள்வது மேலும் சிறப்பாக இருக்கும். இவை யாவும் வடமொழி நூற்கள் தானே என்று தமிழர்கள் அலட்சிய-மாகவிருந்தால் நஷ்டம் தமிழர்களுக்குத் தான் என்பதை உணரச் சிலகாலம் பிடிக்கும்.

இத்துறைக்கு என்னுல் முடிந்த சேவைகளேச் செய்வ-தற்குத் துவக்கமாகத் தான் இந்நூலே இப்பொழுது நான் வெளியிட முன் வந்துள்ளேன் நான் முன்பு குறிப்பிட்ட ஐந்து பணிகளில் 4வது பணியின் ஓர் அமிசம் தான் இந்-நூல் வெளியீடு. வடமொழி நூற்களில் சைவ சித்தாந்தம் என்ற பொதுத் தலேப்பில் என்னுல் முடிந்த எல்லா நூற்களே-யும் வெளியிட்டுவிட எனக்கோர் ஆர்வம் உண்டு. சைவ சித்தாந்த அன்பர்கள் நிறைய ஊக்கம் தந்தால் என் பணி இன்னமும் சுலபமாயும், விரைவாகவும் நடைபெறும். எப்படியிருந்தாலும் நான் எடுத்த பணியை முடித்துவிட உறுதி பூண்டுள்ளேன். எல்லாம் வல்ல இறைவன் துணே நிற்க வேண்டும்.

வடமொழி நூற்களில் சைவ சித்தாந்தம் என்ற பொதுத் தலேப்பின் முதற் பகுதியாகத் தத்துவப் பிரகாசிகையிலும்,

அதன் இரு உரைகளிலும் காணப்படும் கருத்துக்களைச் சுருக்கி எழுதியுள்ளேன். இந்நூலின் பல இடங்களில் மேலும் விளக்கம் தேவைப்படுகிறது என்பது எனக்குத் தெரியும். ஆனாலும் தற்சமயம் இது ஓர் அறிமுகமாதலால் இதற்கு மேல் விளக்க நான் முயலவில்லை.

வடமொழியில் எழுதப்பட்ட இது தொடர்பான முதல் நூற்கள் ஆகமங்கள். ஆகமங்களையொட்டிய சைவ சித்தாந்தக் கருத்துக்களை முறைப்படுத்தி வெளியிட்ட மிகப் பழமையான நூல் தத்துவப்பிரகாசிகை என்றே எனக்குத் தோன்றுகிறது. இதன் ஆசிரியர் போஜதேவ மன்னன் எனக் குறிப்பிடப்படுகிறது. இந்த மன்னன் வடநாட்டை ஆண்ட மன்னனாக இருந்தால் வட இந்தியாவிலும் அக்காலத்தில் சைவசித்தாந்தக் கருத்துக்கள் வழக்கிலிருந்தது நமக்குப் பெருமையாக உள்ளது. தத்துவப் பிரகாசிகைக்குப் பிறகு வடமொழிச் சைவசித்தாந்தத் துறையில் நூற்றுக்கணக்கான நூற்கள் தோன்றின. அவை பெரும்பாலும் தமிழகத்தில் வாழ்ந்த சைவாசாரியார்களால் எழுதப்பட்டிருக்கலாம் என்பது என் ஊகம். இக்கருத்து பற்றி நான் மேலும் ஆராய வேண்டும்.

பரமாரவமிசத்தைச் சார்ந்த மூன்று மன்னர்கள் போஜன் என்ற பெயரில் விளங்கினர். ஒருவர் கி. பி. 575 லும், அடுத்தவர் கி. பி. 625லும் மூன்றாமவர் கி.பி. 1044லும் ஆண்டனர். இவர்களில் எக்காலத்து மன்னன் தத்துவப் பிரகாசம் அல்லது தத்துவப்பிரகாசிகை எனப்படும் இந்நூலை எழுதினான் எனப் புரியவில்லை. பெரும்பாலும் மூன்றாவதாகக் குறிப்பிட்ட மன்னன் இதனை எழுதியிருக்கலாம் என நான் ஊகிக்கிறேன். தத்துவப்பிரகாசிகை ஆகமங்களைத் தழுவி எழுதப்பட்டிருப்பதாலும், பெரும்பாலான ஆகமங்கள் கி. பி. பதினோராம் நூற்றாண்டளவில்தான் முழு உருப் பெற்றதாலும் என் ஊகம் சரியென்றே படுகிறது. இந்-

நூலாசிரியருக்கு ஆகமங்களிலும், சைவ சித்தாந்தத்திலும் எவ்வாறு பற்று ஏற்பட்டது என்பது புரியாத புதிராகவே உள்ளது.

தத்துவப் பிரகாசத்திற்கு இரு உரையாசிரியர்கள் உள்ளனர் என்பது நிச்சயமாகத் தெரிகிறது. வேறு உரையாசிரியர்கள் இருந்தனரா என உறுதிப்படுத்த முடியவில்லை. இவ்வுரையாசிரியருள் ஒருவர் பெயர் ஸ்ரீ குமாரர். மற்றவர் பெயர் அகோர சிவாசாரியார். இவ்விரு உரையாசிரியர்களும் காலத்தால் பழமையானவர்கள் போன்றே தோன்றுகிறது. பெரும்பாலும் இவர்கள் கி. பி. 11ம், 12ம் நூற்றாண்டைச் சார்ந்தவர்களாகவே இருக்கலாம். இவர்களைப் பற்றி நமக்குத் தேவையான விபரங்கள் கிட்டவில்லை. ஸ்ரீ குமாரர் தமது உரையில் தம்மைப் பற்றி எதுவுமே கூறவில்லை. அகோர சிவாசாரியார் மட்டும் தன்னைப்பற்றி ஒரு சிறிது கூறுகிறார்.

அகோர சிவாசாரியார் கூறுவதிலிருந்து சில உண்மைகளை நாம் அறிய முடிகிறது. இவர் சோழ தேசத்தில் குண்டின குலத்தில் உதித்தவர் என்றும் ஸ்ரீ சர்வாத்ம சிவனுடைய மாணவர் என்றும், மிகப் பெரும் சைவவாதியென்றும், இரண்டு இலட்சம் நூற்கள் எழுதியவரென்றும் தெரிகிறது. இவரது காலத்தை உறுதிபடுத்த முடியவில்லை.

இவர் தமது உரையில் ‘சித்தாந்த சாத்திர ஞானமில்லாமல் அத்வைத வாசனையுடன் கூடிய வேறு சில உரையாசிரியர்கள் தத்துவப்பிரகாசத்திற்கு உரை எழுதியுள்ளார்கள்’ எனக் குறிப்பிடுகிறார். ஆனால் அவ்வாசிரியர்கள் பெயரைக் குறிப்பிடாமல் போனதால் நாம் இது பற்றி ஒன்றும் தெளிவாக்கிக் கொள்ள முடியவில்லை. இவரது உரைக்கும் ஸ்ரீ குமாரர் உரைக்கும் உள்ள தொடர்பும் விளங்கவில்லை.

ஸ்ரீ குமாரர் உரை முந்தியதா, அகோர சிவாசாரியாரின் உரை முந்தியதா என அறிவது கடினமாக உள்ளது.

தத்துவப்பிரகாசத்திற்கு அகோரசிவன் செய்த உரை மிகவும் சுருக்கமாக உள்ளது. ஸ்ரீ குமாரரின் உரை சில இடங்களில் மிக நீண்டு போகிறது. பல நூற்களை மேற்கோள் காட்டுவதில் ஸ்ரீ குமாரர் முன் நிற்கிறார். அகோரசிவாசாரியார் தமது உரையில் தாம் எழுதிய வேறு பல உரைகளைக் குறிப்பிடுகிறார். ஆனால் ஸ்ரீ குமாரர் வேறு நூல்கள் எழுதியதாக எங்குமே குறிப்பிடவில்லை. உரையாசிரியர்கள் என்ற முறையில் இருவரது உரையிலும் தனித் தனியாகச் சில சிறப்புகள் உள்ளன.

இப்போது, வடமொழிச் சைவ சித்தாந்த நூற்களை தமிழ் மக்களுக்கு அறிமுகப்படுத்துவது ஒன்றுதான் என் நோக்கம். மாதவச்சிவஞானயோகிகள் காலம் வரை வடமொழிச் சைவ சித்தாந்த நூற்கள் தமிழ் மக்களால் படிக்கப் பட்டு மேற்கோள் காட்டப்பட்டன. வடமொழிச் சைவ சித்தாந்த நூற்களின் பெருமையை உணர்ந்த மாதவச் சிவஞான யோகிகள் தமிழர்களுக்கு இந்நூற்கள் பயன்பட வேண்டும் என்பதற்காகத் தாமே சித்தாந்தப் பிரகாசிகை என்னும் நூலை மொழி பெயர்த்திருக்கிறார்கள். ஆனால் அதற்குப் பிறகு சைவ சித்தாந்த உலகம் மெய்கண்ட சாத்திரங்களுடன் நின்று விட்டது

இந்நூல் வரிசையை எழுதுவது வடமொழியின் பெருமையை நான் கூறுவதற்காக அல்ல வென்பதை நான் இங்குத் தெளிவாக்க விரும்புகிறேன். மெய் கண்ட சாத்திரங்களுக்குப் போட்டியாக வடமொழியிலும் சைவ சித்தாந்தம் உண்டு எனப் பெருமை அடித்துக் கொள்வது என் நோக்கமல்ல. வடமொழியில் இருந்தாலும் இவை சைவ சித்தாந்திகள் சொத்து. அவற்றை இத்தனை காலம் மங்கி

மறைய விட்டது போன்று இனியும் விட்டால் அதனுல் நம் சொத்தின் ஒரு பகுதியை நாமே இழப்பதற்கு மனமொப்பி விட்டோம் என்ருகி விடும். இந்நிலைக்கு நாம் போகமாட்டோம் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

வடமொழிச் சைவசித்தாந்த நூற்களை வரிசைப் படுத்தி அவற்றை அவை யெழுந்த கால ரீதியாக அறிமுகப்படுத்த முயலுகிறேன். மத்தியில் எனக்குத் தேவையான நூற்கள் கிடைக்காது போனுல் நான் கால முறையைக் காப்பாற்ருமல் கிடைத்த நூற்களை மட்டும் அறிமுகப் படுத்த வேண்டி வரும். மிக முக்கிய நூற்களில் ஒன்ருன சிவாக்கிர பாஷ்யத்தைத் தேடி வருகிறேன்; கிடைக்கவில்லை.

இந்நூலில் நான் தந்திருக்கும் சுருக்கம் இரு நூல்களை அடிப்படையாகக் கொண்டது. 1920ல் மகாமகோபாத்தியாய கணபதிசாஸ்திரியாரால் வெளியிடப்பட்ட ஸ்ரீகுமாரரின் உரையுடன் கூடிய தத்துவப் பிரகாசிகையின் பதிப்பையொட்டி ஸ்ரீகுமாரரின் கருத்துக்களைத் திரட்டியுள்ளேன். 1923ல் தேவகோட்டையிலிருந்து வெளிவந்த ஆகோரசிவாசாரியாரின் உரையுடன் கூடிய தத்துவப் பிரகாசிகையின் வடமொழிப் பதிப்பையும், தமிழ் மொழி பெயர்ப்பையும் ஓட்டி அகோர சிவாசாரியாரின் கருத்துக்களைத் திரட்டியுள்ளேன். தத்துவப் பிரகாசிகையின் சுலோகங்களின் கருத்தை விளக்கும் வகையில் அவர்கள் எழுதிய கருத்துக்களை மட்டும் இங்குத் திரட்டியுள்ளேன். அவர்கள் உரையில் காணப்படும் வேறு பல விஷயங்களை இங்கு நான் கவனத்தில் ஏற்கவில்லை. அவற்றை இது தொடர்பாக நான் வெளியிடப் போகும் வேருெரு நூலில் பயன்படுத்தலாம்எனக் கருதுகிறேன்.

தேவகோட்டைச் சபையினருக்கு ஸ்ரீகுமாரர் உரை ஒன்று உள்ளது தெரியும் என்று குறிப்பிட்டிருக்கிருர்கள். மகா மகோபாத்தியாய கணபதி சாஸ்திரியாருக்கு அகோர

சிவத்தின் உரையிருப்பது தெரியாது எனப்படுகிறது. இரு உரைகளையும் தழுவி எழுதப்படும் முதல் நூல் இதுதான். கணபதி சாஸ்திரியார் தத்துவப் பிரகாசிகையையும் அதன் உரையையும், பாசுபதர்களின் நூலாகக் குறிப்பிடுவது வியப் பாக உள்ளது! எவ்வாறுயினும் இவ்விரு பதிப்புகளுக்கும், எனது நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டுள்ளேன். அன்பர்கள் எனக்கு ஆதரவு தந்து இத்துறை யில் என்னை மேலும் ஊக்குவிக்க வேண்டும் என வேண்டுகி றேன்.

இந்நூலைத் தொடர்ந்து இதே வரிசையில் மேலும் பல நூற்கள் வெளிவரவிருப்பதால் சைவசித்தாந்தத்தில் பற்றுள்ள அன்பர்கள் தங்கள் பெயர்களைச் சர்வோதய இலக்கி யப் பண்ணையில் பதிந்து கொண்டால் இவ்வரிசையில் வெளி யாகும் நூற்களின் விபரங்களை அன்பர்களுக்கு அவ்வப் பொழுது தெரிவிக்க வசதியாக இருக்கும்.

இம் முயற்சி ஒரு சிவ பணி எனக்கருதி அனைவரும் ஆதர வளிக்க வேண்டும் என வேண்டிக் கொள்கிறேன்.

என் குருநாதன் எனக்குத் துணை நிற்பான் என்ற நம்பிக்கை எனக்கு என்றும் உண்டு.

மதுரை
21.6.77

கோ. சுந்தரமூர்த்தி.

1. ஞானத்திரளாகவும், ஒருவனாகவும், எங்கும் பரந்தவனாகவும், என்றுமுள்ளவனாகவும், எப்பொழுதும் ஆனந்தமயமாக இருப்பவனாகவும், தலைவனாகவும், சாந்தனாகவும், பிரபஞ்சத்தின் ஒரே வேராக உள்ளவனாகவும், அனைவரிடமும் கருணையுள்ளவனாகவும் உள்ள சம்பு அனைத்துக்கும் மேலாக விளங்குகிறான்.

ஞானத்திரள் என்றால் ஞானத்தின் பிழிவு என்றும், ஞானவடிவம் என்றும் பொருள். இங்கு ஞானம் என்பது ஞானத்தையும் கிரியையும் ஒருங்கே குறிக்கும். இறைவனுடைய உடல் ஞானவடிவான உடல். இறைவனுடைய உடல் சுத்தமாயா வடிவம் என்பாரும் உளர். இறைவன் ஒருவன் என்று சுட்டியது பல கடவுளர் உளர் என்பதை மறுப்பதற்காக. ஒன்றுக்கு மேற்பட்ட இறைவன்கள் உளர் என்பதும், ஓர் இறைவனுக்குப்பிறகு மற்றொரு இறைவன் தோன்றுகிறான் என்பதும் ஏற்க முடியாத கூற்று. இறைவன் ஆகாசம் போல் எங்கும் பரந்தவன். ஆனால் ஆகாசம் போன்று சடப்பொருள் அல்லன். இறைவனைப் பரந்தவனாக்க் கொள்வது அவன் பிரபஞ்சப் பொருட்கள் தோறும் அந்தர்யாமியாக உள்ளான் எனக்குறிப்பதற்காக. இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய காலத்தின் மூன்று வடிவங்களிலும் அவன் உள்ளவன் என்பதைக்காட்ட அவன் என்றுமுள்ளவன் எனக் கூறப்படுகிறது. இறைவனுக்குத் தோற்றமும், இறுதியும் கிடையாது என்பதை இது காட்டுகிறது. இறைவன் நித்திய முத்தன் என்பதையும் இச்சொல் சுட்டுகிறது.

இறைவன் எப்பொழுதும் ஆனந்தமயமாக உள்ளவன். அவன் சுயம்பிரகாசமானவன் என்பதை இது காட்டுகிறது.

தலைவன் என்பதால் அவனே அனைத்துக்கும் அதிகாரி. அவனுக்குப் பயந்துதான் எல்லாப் பொருட்களும் தத்தம் வேலையைச் செய்கின்றன. இதனால் இறைவன் யாருக்குமே அடிமையில்லை எனப் பொருள் கூறலாம். தலைவன் என்பதால் அவனே அனைத்தையும் படைக்கிறான் என்றாகிறது. இறைவனுடைய செயல்கள் இறைவனைப் பந்தப்படுத்துவதே இல்லை. இறைவனை எதுவும் கட்டுப்படுத்தாததால் அவன் சாந்தன். இறைவனுக்கு விருப்பு வெறுப்பு எதுவும் இல்லை. இறைவனுக்கு எந்த மலமும் இல்லாததால் அவன் சாந்தன். இறைவன்தான் இப்பிரபஞ்சத்திற்கும் காலத்திற்கும் மூலகாரணன். அவனே நிமித்த காரணனாகவும், முதற் காரணமாகவும் உள்ளான். ஆகவே அனைத்துக்கும் அவனே அடிவேர் போன்றவன். சித்துப்பொருள், அசித்துப்பொருள் அனைத்துக்கும் மோட்சமளிப்பதன் மூலம் அருள்புரிவதால் இறைவன் முழுமையான கருணைப்பொருள். கருணாமூர்த்தி என்பதால் இறைவனே உலகைப் படைத்துக்காத்து அழித்து மறைத்து அருளுகிறான் என்பது பொருள்.

இறைவன் அனைத்தையும் செய்வதால் அவன் எல்லா அறிவும் பெற்றவன் எனப் பொருளாகிறது. அறிவில்லாத ஒருவன் எச்செயலையும் செய்ய முடியாது. இப்படிப்பட்ட இறைவன் அனைத்துக்கும் மேலாக இருக்கிறான்.

2. உற்பத்தியாதல், அழிதல், மறைந்துபோதல் என்ற நிலைகள் அற்றதும், மோட்சத்தை அளிப்பதும், ஞானக் கிரியை என்னும் இயல்பு படைத்ததுமான சம்புவின் தேஜஸ் அனைத்துக்கும் மேலானதாக உள்ளது.

சம்புவிற்கு அஞ்ஞானமும், அதன் விளைவாக உள்ள ராகத் துவேஷங்களும், இவற்றின் விளைவாக உள்ள தரும அதருமங்களும், சரீர இந்திரியங்களும் உள்ள சம்சாரம் என்னும் பந்தமும் இல்லாததால் சம்புவின் தேஜஸ் சூரியன் போன்று உதிப்பதும், அத்தமிப்பதும், மறைவதும் இல்லை. அஞ்ஞான மில்லாததால் இதற்குப் பூரண ஞானம் உள்ளது. இது என்றுமே ஒரே வடிவாக உள்ளது.

இது பிறிதோர் அறிவுப் பொருளாலோ, மற்றதாலோ மலத்தினின்றும் விடுதலை அடையாமல், மலத்தோடு கூடியிருக்கும் ஆன்மாக்களுக்கு அம்மலத்தை நீக்கி விடுதலை அளிக்கிறது.

தன்னைக்குறித்துத் தியானம் செய்பவர்களுக்கு இது முக்தியை அருளுகிறது. இக்காரணங்களால் இது மற்ற எல்லா தேஜசுகளைக் காட்டிலும் மேலானதாக உள்ளது.

சிவன் ஞானமே சொரூபமானவன். சிவனுடைய தருமமாகிய ஞானக்கிரியை வடிவமும் ஞானமேயாகும்.

சம்புவின் தேஜஸ் என்பதைச் சம்புவின் மந்திர வடிவம் என்றும் கூறலாம்.

3. ஒன்றும். அறிவு வடிவாயும், முதற் பொருளா யும் உள்ள சக்தியின் மூலமாகத்தான் பசுக் கூட்டங்களுக்குப் போகத்தையும், மோட்சத் தையும் அருளுவதில் சம்பு வல்லவராகிறார். அப்படிப்பட்ட சக்திக்கு முழுமையான வந்தனம்.

சக்தியின் மூலமாகத்தான் பகவான் மகேசுவரர் பசுக் கூட்டத்திற்குப் போக மோட்சத்தைத் தருவதில் வல்லவ ராகிறார். அவளின்றிப் பகவானின் அருள் கிட்டாது. சக்தி வெளிப்படாத நிலையிலுள்ள சிவம் செயலற்று எதிலும் அக்கறையற்று இருப்பதால் போக மோட்சம் அருளும் வாய்ப்பேயில்லை. சக்தி வெளிப்பட்ட நிலையிலுள்ள சிவம் தான் அருளும் தன்மையுடையதாயிருக்கிறது. சக்தி வடி வான காரணத்தால்தான் இறைவனுக்குப் பஞ்சகிருத்தியங் களான ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் முதலியன செய்வதில் சித்தமுண்டாகி அதனால் உயிர் களுக்குப் போக மோட்சம் கிட்டுகிறது.

சிவம் என்றும் சக்தியென்றும் தனித்தனியாகக் குறிப் பிட்டாலும், இருவரும் உண்மையில் ஒருவரே. பிரபஞ்சப் பொருட்கள் அனைத்தும் சிவசக்திவடிவாகவே உள்ளன. சிவனை ஆண்பாலிலும், சக்தியைப் பெண்பாலிலும் சுட்டுவது வெறும் வழக்கத்திற்காகவேயொழிய வேறல்ல. சக்தி ஒன்று என்பதால் சக்திக்குக் கூறப்படும் பேதங்களான இச்சாசக்தி வாமசக்தி ஆகியவை அச்சக்தி இயற்றும் தொழில் வேறு பாட்டால் உண்டானவையே ஒழிய உண்மையில் சக்தி பல என்பதால் அல்ல. ஒரே சக்திதான் பல உருவங்களில் செய லாற்றுகிறாள்.

4. உலகிற்கு அருளுவதற்காக, கருணை நிரம்பிய மனத்துடன் தத்துவப்பிரகாசம் என்னும் இந் நூல் சுருக்கமான முறையில் செய்யப்படு கிறது.

தத்துவங்களை விளக்கிக் கூறுவதுதான் இந்நூலின் முக்கிய குறிக்கோள். சைவசித்தாந்தம் ஏற்றுக்கொள்கின்ற பிருதிவி தத்துவம் முதல் சிவதத்துவம் வரையிலான அனைத் துத் தத்துவங்களையும் இந்நூல் விளக்குகிறது. இத்தத்துவங் களுடன்கூட இத்தத்துவங்களுக்கெல்லாம் மூலமாயும், கருத்தாவாகவும் உள்ள பரமசிவனைப் பற்றியும், இத்தத்து வங்களால் பயன்பெறும் அனைத்து ஆன்மாக்களைப் பற்றியும், இந்நூல் விளக்குகிறது

தத்துவங்களை விளக்குவதால் என்ன பயன்? தத்துவங் களைப் பற்றிய உண்மைகளை அறிவதன் மூலம் அஞ்ஞானம் அகலுகிறது. இதனால் உலகப் பொருட்கள் மீதுள்ள பற்று விட்டுப் போகிறது. இதன் விளைவாகத் தருமத்திற்கும், அதரு மத்திற்கும் இடையே உள்ள வேறுபாடு புலப்படுகிறது. இதனால் ஆன்மாக்கள் பக்குவப்படுகின்றன. இத்தருணத்தை எதிர் பார்த்துக் கொண்டிருக்கும் இறைவன் குருவாக வந்து தீட்சையின் மூலம் முக்தி அருளுகிறான். முக்திதான் வாழ்வின் இறுதி இலட்சியம்.

இப்படி முக்தி கிட்டவேண்டும் என்றுதான் சம்சார பந்தத்தில் உழன்று கொண்டிருக்கும் ஒவ்வொரு ஆன்மாவும் முயலவேண்டும்.

5. சிவாகமங்களில் பதி, பசு, பாசம் என்ற மூன்று தான் முக்கியமாகப் பேசப்படுகின்றன. இம் மூன்றனுள் பதியைத்தான் சிவம் என்கிறோம். பசுக்கள் என்பவை ஆன்மாக்கள். பாசங்கள் அருத்தபஞ்சகம் எனப்படும் ஐந்து பொருட்கள்.

சிவாகமங்களில் பல விஷயங்கள் பேசப்பட்டாலும், அவை இறுதியில் பதி, பசு, பாசம் என்ற மூன்றைக் குறித்தே பேசப்படுகின்றன. ஆகவே சிவாகமங்கள் கூறும் விஷயங்கள் யாவற்றையும் இம் மூன்று பொருட்களுள் அடக்கிவிட முடியும். பதியாகவுள்ள சிவனில் சுத்த தத்துவப் பொருட்கள் அனைத்தையும் அடக்கலாம். மாயையின் விளைவுகளான சுத்தாசுத்த தத்துவங்கள் அனைத்தையும் பசுவில் அடக்கி விடலாம். அசுத்த தத்துவங்கள் யாவற்றையும் பாசங்களில் அடக்கி விடலாம்.

சிவன் என்னும் ஒருமையால் சிவத்தன்மை கொண்ட மந்திர மந்திரேசுவரர், மந்திர மகேசுவரர், முத்தான்மாக்கள் சக்தி, சிவன் ஆகியோரும், இவர்களைப் பற்றிக் குறிப்பிடும் ஆகம வாசகங்களும், சிவத்தன்மையை அடைவதற்கு வழி காட்டும் தீட்சை முதலிய சாதனங்களும் கொள்ளப்படும். பசுத்தன்மையுடன் கூடிய விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் ஆகிய பாசத்துடன் தொடர்புபட்ட அனைவரும் ஆன்மாக்கள் என்னும் சொல்லால் சுட்டப்படுவர். பாசம் என்ற சொல்லில் ஆணவம், திரோதானசக்தி, கன்மம், அசுத்த மாயை, சுத்தமாயை என்பவையும், சுத்தமாயை அசுத்த மாயை ஆகியவற்றின் காரியங்களாகவுள்ள தனு, கரண, புவன, போகங்களும் கொள்ளப்படும்.

6. முத்தான்மாக்களும் சிவத்தன்மையுடையவர்களே. ஆனால் இவர்கள் பரமசிவனுடைய அருளால் முக்தியடைந்தவர்கள். அந்தப் பரமசிவன் என்றுமே முத்தன். அவன் ஒருவன்; பஞ்ச மந்திரங்களைத் திருமேனியாக உடையவன்.

முக்தியடைந்த ஆன்மாக்களுக்குத்தான் சிவத்தன்மை உண்டு. அதற்குமுன் அவர்கள் பாசத்தால் மூடப்பட்டிருப்பதால் அவர்களுக்குப் பசுத்தன்மைதான் உண்டு. முத்தான்மாக்களுக்கு மலம் இல்லாததால் அவர்கள் சிவனோடு சமத்தன்மை அடைந்தவராவர். சிவன் ஒருவனே அனாதிமுத்தன். முக்காலங்களிலும் சிவனுக்கு மலத்தொடர்பே கிடையாது. இயல்பாகவே சித்தித்துள்ள நித்திய, நிர்மல, நிரதிசய, சர்வஞ்ஞத்துவ, சர்வ கர்த்திருத்துவம் உடையவன் சிவனே.

சிவன் ஐந்து மந்திரங்களைத் திருமேனியாக உடையவன். இம் மந்திரங்கள் யாவை என விளக்குவதில் பேதம் உள்ளது வேதத்தில் கூறப்பட்ட காயத்திரி போன்ற ஐந்து வகை மந்திரங்கள் எனச் சிலர் கூறுவர். நான்கு வேதங்களும், பிரணவமும் கொண்டது இவ்வைந்து மந்திரங்கள் எனச் சிலர் விளக்குவர். பீஜம், பிந்து, நாதம், சக்தி, சாந்தி எனக் கூறுவர் சிலர். சிவனுக்குரிய ஐந்தெழுத்தே இவ்வைந்து மந்திரங்கள் என்பாரும் உளர். சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகங்களே இவ்வைந்து மந்திரங்கள் என்பது சிலர் கூற்று.

சிவனுக்கு உண்மையில் எத்திருமேனியும் கிடையாது. இங்குக்கூறப்படும் மந்திரமேனி உபசாரமாகக்கூறப்படுவதே. சிவனுக்கு எதற்காக உபசாரமாகவேனும் திருமேனி ஒன்று கல்பிக்க வேண்டுமென்றால், சரீரமில்லாதவனிடம் தியான பூசை செய்ய முடியாது. தியானம் செய்யாமல் ஆன்மாக்கள் உய்யவழியில்லை. ஆகவே ஆன்மாக்கள் தியானிப்பதற்காகவே சிவனுக்கு மந்திரத் திருமேனி கல்பிக்கப்பட்டுள்ளது.

7. நித்திய பரிபூரணனுன இப்பரமசிவனுடைய செயல்கள் சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம் என ஐந்து வகைப்படும்.

மேலே கூறப்பட்ட இவ்வைந்து தொழில்களையும் செய்ய வல்லவன் சிவன் ஒருவனே. மற்ற எந்தஉயிரோ, மாயையோ, உலகப்படைப்பு முதலிய செயல்களைச் செய்ய முடியாது. இவ்வைந்து தொழில்களும் சுத்தமாயா காரிய விஷயத்தில் நேரே சிவனைக் கருத்தாவாக உடையவை. அசுத்தமாயா காரிய விஷயத்தில் அனந்தேசுவரர் முதலியோர் வாயிலாகப் பரம சிவனைக் கருத்தாவாக உடையவை.

சிருட்டி என்பது ஐவகைப்படும். அவை பாவம், தத்துவம், புவனம், பூதம், பிரத்யயாத்மா என்பன. சிவபெருமான் நேரே செய்யும் சிருட்டி, சுத்ததத்துவ புவன யோகங்களையும். அவற்றில் வசிப்பதற்குரிய வித்தியா வித்தியேசுவரர்கள் போன்ருேரையும் படைப்பது. திதி என்பது காப்பாற்றுதல். தனது சக்தியால் தோற்றுவிக்கப்பட்ட எல்லா உலகங்களையும் அதனதன் விஷயத்தில் நிலைக்கச் செய்தல். சங்காரமாவது, காரியங்களை அந்தந்த காரணங்களில் ஒடுக்குதல். அதாவது, சுத்தமாயாகாரியங்களைச் சுத்தமாயையிலும், அசுத்தமாயாகாரியங்களை அசுத்தமாயையிலும் இறுதியில் ஒடுக்குதல். திரோபாவம் என்பது, ஆன்மாக்களைப் பாசத்திஞல் மூடுதல். உயிர்களின் பாசம் நீங்குவதற்காக அவ்வுயிர்களை அவரவர்க்குரிய போகங்களில் அழுந்தி அனுபவிக்கச் செய்தல். அனுக்கிரகமாவது ஆன்மாக்களுக்குப் பாசத்தை நீக்கி மோட்சத்தை அருளல்.

8. விஞ்ஞான கலர், பிரளயாகலர், சகலர் எனப் பசுக்கள் மூவகைப்படுவர். இம்மூவருள் விஞ் ஞானகலர் ஆணவமலம் மட்டும் உடையவர். இரண்டாவதாகக் கூறப்பட்ட பிரளயாகலர் ஆணவம், கன்மம் என்னும் இருமலம் மட்டும் உடையவர்.

பாசத்தினுல் கட்டுப்பட்டவர் பசுக்கள் எனப்படுவர். பிராணனே, மனமோ, புத்தியோ பசுக்கள் அல்ல. இவற்றிற் கெல்லாம் அப்பாற்பட்ட ஆன்மாதான் பசு. பாசத்துடன் தொடர்புபட்ட நிலையில்தான் ஆன்மா பசுவாகிறது.

விஞ்ஞானம், யோகம், சந்நியாசம், அனுபவம் ஆகிய இவற்ருல் கன்ம மலநாசமும், கன்மம் இல்லாததால் கன்மத்தை அனுபவிப்பதற்குரிய கருவியாகிய கலை முதலிய மாயா காரியங்களின் நாசமும் ஏற்படுவதால் விஞ்ஞான கலருக்கு ஆணவ மலம் மட்டுமே உள்ளது. பிரளயத்திலே கலை முதலிய மாயா காரியங்களுக்கு நாசம் உண்டாகும் என் பதால் மாயாமலம் இல்லாமல் பிரளயாகலருக்கு மற்ற இரு மலங்களான ஆணவம், கன்மம் ஆகிய இருமலங்கள் மட்டும் உள்ளன.

9. ஆணவ மலம், கன்ம மலம், மாயாமலம் ஆகிய மும்மலங்களையும் உடையவர் சகலர். முன்னர்க் கூறப்பட்ட விஞ்ஞானகலர் சக்தி தேய்ந்த மலத்தையுடையவர் என்றும், சக்தி தேயாத மலத்தையுடையவர் என்றும் இரு வகைப்படுவர்.

சகலருக்கு மாயாமலத் தொடர்பு நேரே கிடையாது. ஆனால் இவர்களுக்கு மாயாமல காரியங்களான கலை முதலிய தத்துவங்களின் தொடர்பு இருப்பதால் இவர்கள் மும்மலம் உடையவர் எனக் கூறப்படுகின்றனர். கலையுடன் கூடியிருப்பதாலேயே இவர்கள் சகலர் எனப்படுகின்றனர்.

விஞ்ஞான கலர் இருவகைப்படுவர். சக்திதேய்ந்த என்பதற்குப் பக்குவமடைந்த மலம் உடையவர் எனப்பொருள். சக்தி தேயாதவர்கள் பக்குவமடையாத மலம் உடையவர்கள்.

10. இருவகைப்பட்ட விஞ்ஞான கலருள் பக்குவமடைந்த மலத்தையுடைய எண்மரைப் பரமசிவன் அருள் பாலித்து வித்தியேச பதத்தில் நியமிக்கிறார். ஏனையோரை மந்திரேசுவரர்களாகச் செய்கிறார். மந்திரேசுவரர்கள் ஏழுகோடி பேர்களாகும்.

வித்யேச பதத்திலும், மந்திரேசுவர பதத்திலும் நியமிக்கப்படுபவர்கள் அனைவரும் பக்குவமடைந்த விஞ்ஞான கலர்களே. அவர்களில் யாருக்கு மலப்பக்குவம் அதிக அளவில் உள்ளதோ அவர்களில் எண்மர் வித்யேச பதத்தில் சேருகின்றனர். இவர்களுடன் ஒப்பிடப்படும்போது சற்றுக் குறைவான பக்குவமடைந்தவர்கள் மந்திரேசுவரபதத்தில் சேருகின்றனர்.

அருள் பாலித்தல் என்பது தீட்சைக்கு முற்பட்ட தியானம், சிரவணம் முதலியவற்றால் முக்தியறிவைக் கொடுப்பது. அவர்களுக்கு ஏற்ற அதிகாரம் அளிப்பதும், அனைத்தையும் அறியும் அறிவைத் தருவதும், சுத்தமாயா சரீரத்தைத்தருவதும், அருளின் கூறுகள்தான்,

அனந்தர், சூக்குமர், சிவோத்தமர், ஏகநேத்திரர், ஏகருத்திரர், திரிமூர்த்தி, சீகண்டர், சிகண்டி என்பவர்கள் வித்தியேச பதத்திலுள்ள எண்மர். இவர்களுக்குப் பஞ்ச கிருத்தியத்தில் அதிகாரமும், சுத்த அத்துவாவுக்குக் கருத்தர்களாக இருக்கும் தன்மையும், ஈசுவர தத்துவவாசிகளாகும் நிலையும் உண்டு. மற்ற ஏழு கோடி பேர்கள் மகாமந்திரேசுவரர்களாகவும், வித்தியா தத்துவ வாசிகளாகவும் ஆகின்றனர். இவ்வேழு கோடி மகாமந்திரேசுவரர்களும் இருவகைப்படுவர். ஒருவகையினர் பொருத்தமான சகலருக்கு ஆசிரியராகிப்பின் மோட்சம் அடைவர். மறுவகையினர் நிராதார சிவனுடன் தொடர்பு பட்டு மோட்சம் அடைவர்.

11. பிரளயாகலர்களுள் எவர்களுடைய மலகன்மங்கள் பக்குவமாக இருக்கின்றனவோ அவர்கள் மோட்சத்தை அடைகின்றனர். அவர்களில் பக்குவப்படாதவர்கள் புரியட்டக தேகத்துடன் கூடியவர்களாய்க் கன்மவசத்தால் எல்லாப் பிறவிகளிலும் பிறக்கிருர்கள்.

மலபரிபாகம் ஏற்பட்டவுடன் சத்திநிபாதம் நிகழ்கிறது. இதனுல் மோட்சம் கிட்டுகிறது. பக்குவப்படாத பிரளயாகலர்கள் புரியட்டக தேகத்துடன் கூடியவர்களாகக் கன்மத்தின் வசப்பட்டு அக்கன்மத்தை அனுபவிப்பதன் பொருட்டுப் பலவிதமான புவனங்களுக்குரிய பலவித யோனிகளில் பிறக்கிருர்கள்.

12. புரியட்டகம் என்பது அந்தக்கரணம், புத்தி வியாபாரங்கள், இந்திரியங்கள் என விச்சயிக்கப்படுகிறது.

ஆன்மாக்கள் கேவலாவத்தையிலிருந்து நீங்கி முக்தியடையும் வரையுள்ள 36 தத்துவங்களும், அவற்றின் பயனாகவுள்ள சூக்கும தேகமும், புரியட்டகம் எனப்படும். அந்தக்கரணம் என்னும் சொல்லால் அந்தக்கரணத்திற்கு வேறாக உள்ள ஆன்மாவினது போகானுபவத்திற்கு அந்தரங்க சாதனங்களான கலை முதலிய ஏழு தத்துவங்களும் சுட்டப்படுகின்றன. புத்தி காரியம் என்ற சொல் ஐந்து பூதங்களையும் அவற்றிற்குக் காரணங்களான ஐந்து தன்மாத்திரைகளையும் சுட்டும். இந்திரியம் என்னும் சொல் ஞானேந்திரியம், கன்மேந்திரியம் ஆகியவற்றைக் குறிக்கும்.

சப்தம் முதலிய தன்மாத்திரைகள் ஐந்தும், மனம், புத்தி அகங்காரம் ஆகிய மூன்றும் புரியட்டகம் எனச்சிலர் கூறுவர். தன்மாத்திரை, பஞ்சபூதங்கள், ஞானேந்திரியம், கன்மேந்திரியம், அந்தக்கரணம், குணம், பிரகிருதி, கலை ஆகிய எட்டும் புரியட்டகம் என விளக்குவாரும் உளர்.

13. பிரளயாகலருள் ஏனையோர் சிருட்டித் தொடக்கத்தில் கலை முதலியவற்றின் சேர்க்கையால் சகலர்கள் ஆகின்றனர். இவர்களுள் நூற்றுப் பதினெட்டுப் பேர்களைச் சிவன் தானாகவே மந்திரேசுவரர்களாகச் செய்கிறார்.

சிறிது பக்குவமடைந்த பிரளயாகலர் சிருட்டி தொடங்கும் போது கலை முதலியவற்றின் தொடர்பால் சகலர்கள் ஆகின்றனர். இவர்கள் மலத் தொடர்புடையவர்களாக இருந்தபோதிலும் மலப்பக்குவம் சிறிது உடையவர்களாதலால் பிரளயாகலர்களுள் வைத்து எண்ணப்படுகின்றனர். இவர்கள் 118 பேர்கள். இவர்கள் நேராகச் சிவபெருமானால் மந்திரேசுவரர்களாக நியமிக்கப்படுகிறார்கள். இவர்களது கலைகள் போன்றவற்றின் தொடர்பு அநந்தேசுவரர்களால் ஏற்படுத்தப்படுகிறது.

குறிப்பு: தத்துவப்பிரகாச உரையாசிரியருள் ஒருவரான அகோர சிவாசாரியார் 11 முதல் 13 வரையிலான சுலோகங்களைத் தனித்தனியாக விளக்குகிறார். ஆனால் மற்றோர் உரையாசிரியரான ஸ்ரீகுமாரர் 11 முதல் 13 வரை ஒரே தொகுதியாக எடுத்து விளக்குகிறார். கீழ்காணும் விளக்கம் ஸ்ரீகுமாரர் விளக்கத்தை ஒட்டியது. இதற்கு முன்னர் அகோரசிவாசாரியாரின் விளக்கத்தையொட்டி இச்சுலோகங்கள் தனித்தனியாக விளக்கப் பட்டன.

11-13. பிரளயாகலருள் பக்குவமான மல கன்மத்தை யுடையவர்களுக்கு மகேசுவரன் புவனபதி பதவியை அருளுகிறார். இவர்கள் நூற்றுப்பதினெட்டுப் பேர்கள். பக்குவப் படாதவர்கள் கலைகள் முதலியவற்றின் தொடர்பால் சிருட்டிக் காலத்தில் சகலர்களாகி எல்லாப் பிறவிகளிலும் பிறக்கின்றனர். புரியட்டகம் என்பது அந்தக்கரணமும், புத்திகரணமும், கருமகரணமும் ஆகும்.

சிறப்பான முறையில் ஒடுங்கிய கலை முதலியவற்றால் பெற்ற சரீரத்தை உடையவர்கள் பிரளயாகலர்கள். இவர்களில் எவர்கள் ஞானக்கினியின் தொடர்பால் பக்குவப்பட்டவர்களாக உள்ளனரோ அவர்களைப் பரமேசுவரன் புவனபதிகளாக்குகிறார். இவர்களில் சிலர் கணேசர்களாக ஆகின்றனர். இன்னும் சிலர் மந்திர, தந்திரேசுவரர்களாகின்றனர். மந்திரேசுவரர்கள் 118 பேர்கள். இவர்களைப் பிரம்மா போன்றவர்கள் வழியாக அல்லாமல் நேராகவே மகேசுவரன் மந்திரேசுவர்களாக நியமிக்கிறார்.

பக்குவப்படாதவர்கள் சகலர்களாகிப் பிறக்கிறார்கள். ஆன்மா எங்கும் பரந்ததாகவிருந்தும்,உருவற்றதாகவிருந்தும் புரியட்டகத்தின் துணைகொண்டு பிறப்பெடுக்கிறது. சரீரத்

தில் உள்ள எட்டுப் பொருட்களுக்குப் புரியட்டகம் எனப் பெயர். இது பலவாருக விளக்கப்படுகிறது. தத்துவப்பிர காசிகையின் ஆசிரியர் கொள்கைப்படி இது அந்தக்கரணம், புத்திகரணம், கருமகரணம், ஆகும். இது எப்படி எட்டா கிறது என்ருல் புத்தி, அகங்காரம், மனம் என்னும் அந்தக் கரணமும், புத்திகரணமும், கர்மகரணமும் ஆகிய மூன்றும், இவைதவிர இவற்றின் நிமித்தங்களான சப்தம் போன்ற ஐந்தும் சேர்ந்து எட்டாகிறது. அதாவது சப்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம், புத்தி இந்திரியம், கர்மேந்திரியம், அந்தக்கரணம், ஆகிய எட்டும் புரியட்டகம் என்பது தத்து வப் பிரகாசிகையின் கருத்து. வேறு சிலர் சப்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம், மனம், புத்தி, அகங்காரம் ஆகிய எட்டும் புரியட்டகம் என்பர். மற்றும் சிலர் கருமேந்திரியம், புத்தி இந்திரியம், அந்தக்கரணம், பிராணன், தன்மாத்திரை, காமம், கருமம், வித்தியா என்னும் எட்டும் புரியட்டகம் என்பர்.

14. அந்த நூற்றுப் பதினெண்மருள் எட்டுப்பேர் கள் மண்டலிகள். மற்றொரு எட்டுப்பேர்கள் குரோதாதிகள். வீரேசர் ஒருவர்; சீகண்டர் ஒருவர்; உருத்திரர்கள் நூறுபேர்கள். ஆக நூற்றுப்பதினெட்டுப் பேர்கள்.

ககனேசர் முதலிய எண்மரும் கலையினுடைய மத்தகத்தில் வாசம் செய்பவர்கள். குரோதாதிகள் குண தத்துவத்தில் வாசம் செய்கிறார்கள். வீரபத்திரர் என்னும் வீரேசர் நூறு உருத்திரர்களையும் நியமனம் செய்பவர். சீகண்டர் குண தத்துவத்தில் வசிக்கிறார். குண தத்துவத்திற்குக் கீழ்ப்பட்ட புவனங்கட்கு இவரே கருத்தர். நூறு உருத்திரர்கள் பிரம் மாண்டங்களுக்கு ஆதாரமாக உள்ளவர்கள்.

15. பக்குவமடைந்த சகலர்களைச் சக்திபாதத்தால் உயர்த்தி ஆசாரிய வடிவத்தைக் கொண்டு அவர்களுக்குத் தீட்சை அருளி அவர்களைப் பரதத்துவத்தில் (மோட்சத்தில்) சேர்த்து வைக்கிறார் இறைவன்.

பரமேசுவரனின் சக்தி இருவகைப்படும். ஒன்று கட்டுப் படுத்தும் சக்தி; மற்றது விடுவிக்கும் சக்தி. முதற் சக்தி அனாதிகாலமாகவே உள்ள பசுக்களைப் பாசஜாலங்களால் கட்டுப்படுத்துகிறது. இரண்டாவது சக்தி பரமேசுவரனிடத் திலேயே இருந்து கொண்டு கருமமலம் தீர்ந்தவுடன் ஆன்மா மீது இறங்குகிறது. இச்சக்திநிபாதம் உண்டானவுடன் பகவான் ஆசிரிய வடிவம் கொண்டு தீட்சை கொடுத்துச்சிவ சாமியரூபமான மோட்சத்தில் சேர்ப்பிக்கிறார். மந்தமான மலபாகம் உடையவர்களை மந்ததர சக்தி நிபாதத்தால் வித்தியேசுவரர் முதலிய பதங்களில் சேர்க்கிறார்.

சகலருக்குக் குருவாக வந்து அருளுகிறார் என்பதால் விஞ்ஞானகலருக்கும், பிரளயாகலருக்கும் குருவடிவு கொள் ளாமலேயே அருளுகிறார் எனப்பொருள்.

மலத்திற்கு ஞானத்தினால் மட்டும் நாசமில்லை. தீட்சை வடிவிலான இறையருளால்தான் நாசம்.

16. மும்மலங்களால் கட்டுப்பட்ட ஏனையோரை (முன்பு வகுக்கப்பட்ட பிரிவுகள் எவற்றிலும் உட்படாதவர்களை) அவரவர்க்குரிய கன்மங்களை அனுசரித்துப் போகங்களை அனுபவிப்பதற்குப் பரமசிவன் ஏவுகிறார். இவ்வாறு பசுக்களின் பிரிவு கூறப்பட்டது.

புரியட்டகம் எனப்படும் சூக்கும தேகத்தால் கட்டுண்ட சகலர்களை விஷயசுகம் அனுபவிப்பதன் பொருட்டு இறைவன் தூலதேகம் கொடுத்து ஏவுகிறான்.

17. புருஷனுக்குரிய பாசங்கள் நான்கு விதங்களாகும். அவற்றுள் முதல் வகைப் பாசம் மலம் எனப்படும். இரண்டாம் வகைப்பாசம் கருமம் என்ப்படும் மூன்றும் வகைப்பாசம் மாயையின் காரியங்கள் எனப்படும். திரோதாயகமாகிய சிவசக்தியின் காரியங்கள் நான்காம் வகைப் பாசமாகும்.

பசுவைக் கட்டுப்படுத்துபவை பாசங்கள். அவற்றுள் முதலில் நினைக்கத்தக்கது மலம். மலத்தின் தன்மையைப் பற்றிப் பலர் பலவிதமாகக் கூறுகின்றனர். ஞானம் உண்டாவதற்கு முன்னுள்ள இன்மை (பிராகபாவம்) எனச் சிலர் கூறுவர். இருள்போன்று ஜடமான பாவபதார்த்தம் எனக் கூறுவர் சிலர். அவித்தையின் சம்ஸ்காரமே மலம் என்பது குருதேவரின் (தத்துவப் பிரகாசிகையின்) கருத்து.

முதல் மலமான ஆணவமலம் அனுதியாகவே ஞானக்கிரியைகளை மறைப்பது. இரண்டாவதாகக் கூறப்பட்ட கன்மம் எப்பொழுது ஏற்பட்டது எனக்கூறமுடியாமல் அனுதியாகவே உள்ளது. மூன்றுவதாகச் சொல்லப்பட்ட மாயையின் காரியங்கள் தூல, சூக்கும சரீரங்கள் வடிவிலானவை. இதனுடைய காரியமாண கலை போன்றவை இடையே வந்து புருஷனுடன் கூடியவை.

ஆணவ மலத்தையொட்டி நின்று செயல்படுதல் பற்றித் திரோதான சக்திக்குப் பாசத்துவம் உபசாரமாகக் கூறப்படுகிறது.

முன்பு பாசம் ஐந்து எனக் கூறிவிட்டு இப்போது பாசம் நான்கு என்பது எப்படிப் பொருந்தும்? மகாமாயாவடிவான சுத்தமாயைக்கு உண்மையில் பாசத்துவம் கிடையாது. ஆகவே பாசம் நான்கு என்பதுதான் பொருத்தம்.

18 ஒன்றாயும், அநேக சக்திகள் உடையதாயும், புருஷனுடைய ஞானக்கிரியைகளை மறைப்பதாயும் உள்ளதற்கு மலம் (ஆணவம்) என்று பெயர். நெல்லுக்கு இயல்பாக உள்ள உமி போலவும், செம்பைப் பற்றி நிற்கும் களிம்பு போலவும் உள்ளது அது.

ஒன்றாக இருந்து பல சக்திகள் கொண்டது என்பது மலத்தின் இலக்கணம். கன்மமும், மாயையின் காரியங்களும் பலவாதலால் அவற்றிலிருந்து மலத்தை வேறுபடுத்துவதற்காக ஒன்று என்ற சொல் மலத்தின் இலக்கணத்தில் சேர்க்கப்பட்டது. திரோதாயக சக்தியும் ஒன்றாதலால் அதனை வேறுபடுத்தப் 'பல சக்திகள் கொண்டது' என்ற தொடர் சேர்க்கப்பட்டுள்ளது. சடமாயும் நித்தியமாயும் இருத்தலால் ஆணவமலம் ஒன்றேயாம். மலம் ஒன்றாயினும் அநேக ஆன்மாக்களை ஒரே நேரத்தில் மறைக்கக்கூடிய அநேக சக்திகள் கொண்டது. ஆகவேதான் ஓர் ஆன்மாவுக்கு ஞானம் உண்டாகும் போது மற்ற ஆன்மாக்கள் தாமாக விடுதலையடைவதில்லை. எந்த ஆன்மா ஞானம் பெறுகிறதோ அதற்குத்தான் விடுதலை.

அநாதியே மறைத்துக் கொண்டுள்ள ஆணவமலம் தீட்சையினால் நிவர்த்திக்கப்படுகிறது. உமி நெல்லின் உற்பத்திக்குக் காரணமாவது போல, சரீர உற்பத்திக்கு மலம் காரணம். ஆன்மாக்களுடன் அநாதியாக மலம் இருப்பதால், மலம் அழிந்தால் ஆன்மாவும் அழியும் என்பது பொருந்தாது.

19. தரும அதரும வடிவாயும், பலவகைப்பட்டதாயும், அநாதியாகவும் உள்ளது கன்மம். மாயை என்பது பொருள் வடிவாயும், நித்தியமாயும், பிரபஞ்சத்திற்கு மூலமாயும் உள்ளது.

கன்மம் அநாதி என்பதால் அதனை ஒன்று எனக் கொள்ள முடியாது. ஒன்றன்பின் ஒன்றாய்த்தொடர்ந்து தோன்றிக் கொண்டிருப்பதாலேயே அது அநாதி எனப்படுகிறது. அது எதனுடைய இன்மையாகவும் (அபாவமாகவும்) இல்லாமல், உள்ளது வடிவிலுள்ள (பாவரூபமான) பொருள். அது தருமம் அதருமம் என இருவகைப்படும். கன்மத்திற்குக் கூறப்படும் வேறுபாடு அதனைச் செய்பவன், செயப்படு பொருள் ஆகிய சாதன வேறுபாட்டால் ஏற்பட்டது. தருமம் எது, அதருமம் எது எனப் பலர் பலவிதமாக விளக்குகின்றனர். பலவிதமான பலன்களைத் தருவதால் கன்மம் பல வகைப்பட்டது எனக் கூறப்படுகிறது.

மலத்தினாலும், கன்மத்தினாலும் மகேசுவரனின் விருப்பத்தினாலும் நல்லது கெட்டது ஆகியவற்றைக் கொடுப்பதற்காக மாயை திரும்பத்திரும்ப தோன்றுகிறது மாயை உலகிற்கு முதற்காரணமாக உள்ளது. அது வேதாந்திகள் கூறுவது போன்று அசத்தியம் அன்று. அது நித்தியமானது, சத்தியமான பாவபதார்த்தமானது.

ஈசுவரனும், மாயையும் உலகிற்கு மூலமான பொருட்கள். ஈசுவரன் மட்டும் தனியாகவோ, மாயை மட்டும் தனியாகவோ இப்பிரபஞ்சத்தை உருவாக்க முடியாது. மாயையும் உண்மை; மாயையின் விளைவுகளான இப்பிரபஞ்சமும் உண்மை.

22. புருஷர்கள் அறியாமையுடையவர்களாகவும், செயல் செய்பவர்களாகவும் இருப்பதற்காக மாயையிலிருந்து காலம், நியதி, கலை, வித்தியை, ராகம் என்ற ஐந்து தத்துவங்கள் உருவாகின்றன.

பெத்தான்மாக்களுக்கு அறியாமையும், செயலும் சித்திப்பதன் பொருட்டு மாயையிலிருந்து நேரடியாகக் காலம் போன்றவை ஒன்றன் பின் ஒன்றாய்த் தோன்றுகின்றன. இவ்வைந்து விதமான தத்துவங்களென்னும் சட்டையைத்தரித்த ஆன்மாவே புருடதத்துவமாகிறது. ஆன்மாவிற்கு புருடதத்துவம் என்று பெயர். அது போகத்தை அனுபவிப்பதாலும் அதற்குப்புருடத்தன்மை என்னும் மலத்தின் தொடர்பு இருப்பதாலும் ஏற்படுகிறது. இதுபற்றிப் பின்னர்க் கூறப்படும்.

23. மாயையிலிருந்து அவ்யக்தமும், குணதத்துவமும், பின்னர் புத்தி, அகங்காரம் என்பவையும் சித்தமும், புத்தி, கரும இந்திரியங்களும், தன்மாத்திரைகளும், இவற்றைத் தொடர்ந்து பஞ்ச பூதங்களும் தோன்றுகின்றன.

அவ்யக்தம் முதலிய தத்துவங்கள் இருபத்தைந்து. இவற்றிற்கு இலக்கணம் பின்னர்க் கூறும்போது இவை மாயையிலிருந்து ஒன்றன்பின் ஒன்றாய்த் தோன்றுகின்றன எனக் கூறப்படும்.

கண், காது, மூக்கு, நாக்கு தோல் என்பவை ஐந்தும் ஞானேந்திரியங்கள். வாக்கு, கை, கால், ஆசனவாய், குறி என்பவை ஐந்தும் கன்மேந்திரியங்கள், சப்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்பவை தன்மாத்திரைகள். நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாசம் என்பவை ஐந்து பூதங்கள்.

20. பாசத்தைத் தொடர்ந்து நின்று புருஷர்களை மறைப்பதால் இறைவனின் சக்தியான திரோதாயக சக்தி பாசம் எனப்படுகிறது இவ்விதம் பாசம் நான்கு வகைப்படும்

மலம், கன்மம், மாயை ஆகியவற்றிற்கு இறைவனின் திரோதான சக்தியில்லாமல் ஆன்மாக்களை மறைக்கும் வல்லமை கிடையாது. ஆகவேதான் திரோதான சக்தி ஆன்மாக்களை மறைப்பதாகச் சொல்லப்படுகிறது.

21. சுத்த தத்துவங்கள் ஐந்து. அவற்றின் முதலாகவும் முடிவாகவும் உள்ளது சிவதத்துவம். சக்தி தத்துவம், சதாசிவ தத்துவம் ஆகியவையும், ஈசுவர தத்துவம், வித்தியா தத்துவம் ஆகியவையும் சிவதத்துவங்களாகவே கருதப்படும்.

சுத்தமான சிவதத்துவங்கள் நித்தியமா அல்லது அநித்தியமா? நித்தியம் எனில் இவற்றிற்கு உற்பத்தி கூடாது. அநித்தியம் எனில் இவற்றின் உற்பத்திக்கு முதற்காரணம் எது என்ற கேள்வி எழும். இதற்கு விடையாக, விந்துவின் வடிவான சிவதத்துவமே இவற்றிற்கு முதற்காரணம் எனக் கூறலாம். எல்லாவற்றிற்கும் முதற்காரணமாக இருப்பதால் இது மாயைபோன்று நித்தியம். மற்ற நான்கும் (சக்தி தத்துவம் முதலியன) இதன் காரியங்களாகும்.

மாயைக்கு மேல் மகாமாயை ஒன்று உண்டு. மகாமாயை உண்டென்பதற்குப் பல பிரமாணங்கள் உள்ளன.

குறிப்பு : அகோர சிவாசாரியார் 21 முதல் 23 வரை எண்ணுள்ள சுலோகங்களைத் தனித் தனியாக எடுத்து விளக் குகிறார். ஆனால் ஸ்ரீகுமாரர் இவற்றை ஒரே தொகுதியாக எடுத்து விளக்குகிறார். இதுதவிர, ஸ்ரீகுமாரர் 21வது சுலோ கம் முதல் தனி ஓர் அத்தியாயமாகப் பிரித்து இவற்றை இரண்டாம் அத்தியாயத்தின் தொடக்கமாகக் கொள்கிறார்.

இருவரது நூல்களிலும் இச்சுலோகங்களைப் பொறுத்த வரை பெரும் பாடபேதம் காணப்படவில்லை என்றாலும் இரண்டாவது சுலோகத்தில் (22ல்) 'அக்ஞ' என அகோர சிவாசாரியார் கொள்வதை 'க்ஞ' எனக் கொள்கிறார் ஸ்ரீ குமாரர். இது கீழ்காணும் விளக்கத்தால் தெளிவாகும்.

முதலில் கூறப்பட்ட ஐந்து தத்துவங்களும் சிவவடிவான தால் சுத்த தத்துவங்களாகும். அதனை அடுத்துக் கூறப்பட்ட ஏழும் பசுவடிவானவையாதலால் சுத்தாசுத்த தத்துவங்கள்.

புருஷனுக்கு ஞானம் உண்டாவதற்காகவும், செயல் செய்வதற்காகவும் மாயையிலிருந்து ஐந்து தத்துவங்கள் உருவாகின்றன. காரணப்பொருளான மாயை, இதன் விளை வுகளான ஐந்து தத்துவங்கள், இவ்வைந்து தத்துவங்களும் இடம் பெறும் புருஷன் ஆக தத்துவங்கள் ஏழு.

அவ்யக்தம் முதல் பிருதிவி வரையில் உள்ளவை முழு வதும் அசுத்த தத்துவங்கள். மாயையிலிருந்து அவ்யக்தம், அவ்யக்தத்திலிருந்து குண தத்துவம், குணதத்துவத்திலிருந்து புத்தி, புத்தியிலிருந்து அகங்காரம், அகங்காரத்திலிருந்து மனம், புத்தி இந்திரியங்கள், கர்மேந்திரியங்கள், தன்மாத்தி ரைகளிலிருந்து ஆகாசம் போன்ற பூதங்கள் உற்பத்தியா கின்றன.

24. புருஷனுடைய போகத்திற்காக இருபத்து மூன்று தத்துவங்கள் பிரதானத்திலிருந்து தோன்றும். பிரகிருதிக்கும் (பிரதானத்திற்கும்) குணதத்துவத்திற்கும் அதிகமான பேதம் இல்லை. (2, 4)

சென்ற சுலோகத்தில் மாயையிலிருந்து பிரகிருதி தோன்றுகிறது எனக் கூறப்பட்டது. ஆகவே சென்ற சுலோகத்தின் படி மாயையிலிருந்து பிரகிருதிக்குக் கீழ் இருபத்து நான்கு தத்துவங்கள் உண்டு என்றாகிறது. ஆகவே இங்கு இருபத்து மூன்று எனக் கூறுவது எப்படிப் பொருந்தும்?

பிரகிருதியில் குணங்கள் அடங்கிக் கிடக்கின்றன; குண தத்துவத்தில் குணங்கள் வெளிப்பட்டு நிற்கின்றன என்பது தான் இவற்றுக்கிடையேயுள்ள பேதம். ஆகவே குண தத்துவத்தைத் தனியாக எண்ணவேண்டிய அவசியம் இல்லை.

புருஷர்களாகிய பசுக்கள் செய்த புண்ணிய பாவத்தினால் விளையும் சுகதுக்கங்களை அனுபவிப்பதற்காகவே இத்தத்துவங்கள் தோன்றுகின்றன.

25. வியாபகமாயும், ஒன்றாயும், நித்தியமாயும், எல்லாத் தத்துவ விளைவுகளுக்கும் காரணமாயும், ஞானக்கிரியா வடிவாயும் உள்ளது சிவ தத்துவம் என ஆசாரியார்கள் கூறுவர். (2,5)

விந்து என்னும் சிவதத்துவம் சுத்த, அசுத்த ஜகத்தை முற்றாக வியாபித்து நிற்கிறது. இந்தச் சிவதத்துவம் மேலான காரணமாகவிருப்பதால், ஒன்று எனப்படுகிறது. எல்லாப் பொருள்களின் வடிவாக விருப்பதாலும் இது ஒன்று எனப்படுகிறது. இது ஒன்றாய் இருப்பதால் நித்தியமாக இருக்கிறது. இந்தச்சிவதத்துவம் எல்லாச் சுத்த தத்துவங் களுக்கு மட்டும் முதற் காரணமாகிறது. அசுத்த தத்துவங் களுக்கு அசுத்த மாயையே முதற் காரணமாகிறது.

ஆன்மாக்களுக்குத் தன்னிடமிருக்கும் ஞானக்கிரியைகளை விளக்குகிறபடியால், இச்சிவதத்துவம் ஞானக்கிரியா சுபாவம் எனப்பட்டது.

ஒன்றாயும், எங்கும் பரந்ததாயும் உள்ள ஆகாசத்தைச் சிவதத்துவத்திலிருந்து வேறுபடுத்துவதற்காக நித்தியம் என்னும் சொல் இங்குச் சேர்க்கப்பட்டுள்ளது. வியாபக மாயும், நித்தியமாயும், ஒன்றாயும் உள்ள பசுக்களை வேறு படுத்த 'எல்லாத் தத்துவ விளைவுகளுக்கும் காரணமாயும்' என்ற தொடர் சேர்க்கப்பட்டுள்ளது. வியாபகமாயும், நித்தியமாயும், ஒன்றாயும், எல்லாவற்றிற்கும் காரணமாயும் உள்ள மாயையை வேறுபடுத்த 'ஞானக்கிரியா வடிவானது' எனச் சேர்க்கப்பட்டுள்ளது.

இங்கு ஆசாரியார்கள் என்பது ஆகமத்தை அறிந்த வர்கள் எனப் பொருள்படும்

26. இச்சை போன்ற எல்லாச் சக்திகளும் இதில் (சிவதத்துவத்தில்) ஒடுங்கி நின்று தங்களுடைய காரியத்தைச் செய்கின்றன ஆகவே இது (சிவதத்துவம்) எல்லாப் பொருள்களுக்கும் அனுக்கிரகம் செய்வதாகச் சொல்லப்படுகிறது. (2, 6)

ஒடுங்கி நிற்றல் என்ற சொல்லைத் தழுவி நிற்றல் என்றும், அதிட்டித்து நிற்றல் என்றும் விளக்கலாம். இச்சை முதலிய சக்திகள் சிவதத்துவத்தைத் தழுவியே செயலாற்றுகின்றன; தன்னிச்சையாக அல்ல. இவை அனுக்கிரகம் செய்யக்கூடியவற்றிற்கு அனுக்கிரகம் செய்தும், இவ்வனுக்கிரகத்திற்கு அங்கமான சிருட்டி முதலியவற்றைச் செய்தும் செயலாற்றுகின்றன. ஆகவே எல்லாத் தத்துவத்திற்கும் காரணமான சிவனும் சர்வானுக்கிரகன் எனப்படுகிறார்.

அசேதனமானது சேதனத்தால் அதிட்டிக்கப்பட்டாலன்றிக் காரியத்தைத் தோற்றுவிக்காது ஆதலால் விந்துவான சிவம் சக்தியால் அதிட்டிக்கப்பட்டுக் காரியங்களைத் தோற்றுவிக்கின்றது.

27. சித்தான ஆன்மாக்களுக்கும், சடமான பாசங்களுக்கும் அனுக்கிரகம் செய்வதற்குக் காரணமான மகாமாயையின் முதற் பரிணமமே சக்தி தத்துவம் எனப்படுகிறது. சிருட்டிக்க வேண்டும் என்ற இச்சை பரமசிவனுக்கு உண்டானவுடன் மகாமாயையின் முதற் பரிணமம் தோன்றுகிறது. இந்த மகாமாயை அவயமற்ற தாயுள்ளது. (2,7)

நிஷ்கிரியனுன சிவனுக்குச் சக்தியின்றி உலகப் படைப்பு முதலியவற்றில் இச்சையில்லை. சித்துக்களாகிய ஆன்மாக்களுக்கு மோட்சத்தின் மூலமும், மல பாகத்தின் பொருட்டும் கன்மானுபவத்தின் பொருட்டும் சிருட்டியின் மூலமும் பரமசிவன் அனுக்கிரகம் செய்கிறுர். தத்தம் வியாபாரத்தில் சாமர்த்தியம் உண்டு பண்ணுதல் மூலம் சடங்களான பாசங்களுக்கு அனுக்கிரகம் செய்கிறுர் பரமசிவன்.

இச்சக்திதத்துவம் சிவதத்துவத்திலிருந்து வேருனதல்ல. சிவ தத்துவத்தின் முதற் பரிணமமே சக்தி தத்துவம் இச்சக்திதத்துவம் அவயவங்கள் அற்றது.எவற்றுல் பதார்த்தங்கள் ஒன்றுக் கொன்று பிரிக்கப் படுகின்றனவோ அவை அவயவங்கள். அந்த அவயவங்கள் அற்றது நிரவயவம்.

28. ஞான சக்தி, கிரியா சக்திகளாகிய இவை குறையாமலும் ஏறுமலும் பரிணமிக்கும் போது, அதுவே சதாசிவ தத்துவம் என்றுகிறது என்பர் அறிஞர். (2,8)

சக்தி தத்துவத்திற்குப் பின் சதாசிவ தத்துவம் உண்டாகிறது. சிருட்டிக்க வேண்டும் என்ற இச்சையையுடைய பரம சிவனுடைய ஞான சக்தியும், கிரியா சக்தியும் சமபங்காக அதிட்டித்து நிற்கும் போது அதனுல் விந்துவாகிய சிவ தத்துவத்தின் இரண்டாவது பரிணமம் உண்டாகிறது. இந்த இரண்டாவது பரிணமமே சதாசிவ தத்துவம் எனப்படுகிறது.

29. எங்கு (சிவதத்துவத்தில்) ஞான சக்தி குறைவை யடைந்து, கிரியா சக்தி அதிகத் தன்மையை அடைகிறதோ, அங்கு அது ஈசுவர தத்துவமாகச் சொல்லப்படுகிறது. இது எல்லாப் பொருட்களுக்கும் கருத்தாவாகக் கூறப்படுகிறது. (2, 9)

சமமாகவிருந்த ஞான இச்சா சக்தி குறைவை அடைந்து, கிரியை சக்தி அதிகத் தன்மையை அடையும் போது சிவ தத்துவத்திற்கு ஈசுவரதத்துவம் என்ற பெயர் ஏற்படுகிறது. கிரியைத்தன்மை அதிகப்படுவதால் இது எல்லாத் தத்துவங்களுக்கும் கருத்தாவாகும் தன்மை படைத்ததாகச் சொல்லப்படுகிறது.

உலகத்திற்குக் கருத்தாக்களான அனந்தர் முதலானவர்களை அதிட்டித்துக் கிரியா சக்திக்கு அதிகத் தன்மை உருவாகிறது. எல்லாப் பொருட்களுக்குங் கருத்தாக்களான அனந்தேசுவரர் முதலானவர்கள் இந்த ஈசுவரதத்துவத்திலேயே அடக்கமானவர்களாக ஆகிருர்கள்.

30. எங்கு கிரியா சக்தியானது குறைவை அடைந்து, ஞான சக்தியானது அதிகத்தை அடைகிறதோ, அங்கு அது வித்தியா தத்துவமாகச் சொல்லப் படுகிறது. ஞானம் அதிகப்படுவதால் இது ஒளி கொடுப்பதாக ஆகிறது. (2, 0)

சமமாகவிருந்த இச்சை, கிரியை சக்தி குறைவை அடைந்து ஞான சக்தி அதிகப்படும் போது, சிவதத்துவமே வித்தியாதத்துவமாகிறது. மற்ற தத்துவங்களுக்கு ஒளி கொடுப்பதுதான் இதன் நோக்கம்.

சப்த கோடி மகாமந்திரர்களே அதிட்டிப்பதால் ஞான சக்தி அதிகப்படுகிறது. இந்த வித்தியா தத்துவத்தில் வசிப் பவர்களுக்கு அனைத்தையுமே அறியும் தன்மையை இது உண் டாக்குகிறது. ஆகவே இது ஒளி கொடுப்பதாகக் கூறப்படு கிறது.

31. சகல ரூபமான விந்துவும், நாதமும் சதாசிவ தத்துவத்தைச் சார்ந்துள்ளன. வித்தியேசுவரர்கள் ஈசுவர தத்துவத்தைச் சார்ந்துள்ளனர். சப்த கோடி மகா மந்திரேசுவரர்களும், வித்தைகளும் வித்தியா தத்துவத்தைச் சார்ந்துள்ளனர். (2,11)

சில நூல்களில் நாதமும், விந்துவும் தத்துவங்களாகச் சொல்லப் படுகின்றன. வேறு சில உரையாசிரியர்கள் வித்தியேசுவரர்களையும், வித்தைகளையும், மகா மந்திரேசுவரர்களையும் சதாசிவ தத்துவத்தில் அடங்கியவர்களாகக் கூறுகிறார்கள், இவற்றை மறுப்பதற்காக இச்சுலோகம் கூறப்படுகிறது.

கலையுடன் கூடிய நாதமும், விந்துவும் சிவதத்துவத்தைச் சார்ந்தவை என்பது சிவதத்துவத்திலிருந்து வேறாகாதவை எனப் பொருள் படும்.

பரவிந்து சிவதத்துவ ரூபமானது. ஆகவே அதன் காரியமான சூக்கும நாதத்திற்குச் சக்தி தத்துவத்தில் சார்பு சொல்லப் பட்டிருக்கிறது. இதனால், இங்குச் சகலவிந்து எனப் படுவதை அட்சரரூபமான விந்து எனவும், நாதம் என்பதை தூலமான நாதம் எனவும் கொள்ள வேண்டும். இவ்விரண்டும் சதாசிவ தத்துவத்தில் அடங்குபவை. வித்தியேசுவரரான அனந்தேசுவரர் முதலியோர் ஈசுவர தத்துவத்தில் அடங்குவர். சப்த கோடி மகா மந்திரேசுவரர்களும், வாசிகமான மந்திர சப்தங்களும், காமிகம் முதலிய இருபத்தெட்டு ஆகமங்களும் வித்தியா தத்துவத்தில் அடங்குகின்றன. மேலே சுலோகத்தில் சொல்லப்பட்ட வித்தைகள் என்பதற்கு 28 ஆகமங்கள் எனப் பொருள்.

32. இந்த ஐந்து தத்துவங்களுக்கும் காலமின்மை யால் முன்னர்ப் பின்னர் என்னும் முறை யில்லை. இவற்றின் செயல் முறையால் தான் இவற்றிற்கு முன்னர்ப் பின்னர் என்ற முறை சொல்லப்படுகிறது. (2,12)

எது முன்னர் எது பின்னர் என்ற முறை சிவதத்துவம் முதல் வித்தியா தத்துவம் வரையிலான தத்துவங்களுக்குச் சொல்வது முறையில்லை. ஏனெனில் இவற்றை தேசகாலத் துடன் தொடர்பு படுத்தவே முடியாது. ஆனாலும் இவற்றின் செயல் முறையால் தான் முன்னர்ப் பின்னர் என்னும் முறை கூறப்படுகிறது.

அகோரசிவாசாரியார் இச்சுலோகத்தை இடைச் செருக லாகக் கொண்டு உரை எழுத மறுக்கிறார் சுத்தாசுத்த அத்து வாக்களுக்கும், அதன் வாசிகளுக்கும் காலமும் இடம் கூறப் படுவதால் இவற்றிற்குத் தேச காலம் பொருந்தாது எனக் கூற முடியாது. ஆகவே இச்சுலோகம் இடைச் செருகல் என் கிறார் அகோரசிவாசாரியார்.

அகோரசிவாசாரியாரது கருத்து பிழை என விளக்கு கிறார் சிவஞான சுவாமிகள் தமது சிவஞானசித்தியார் உரையில்.

33. விசித்திரமான பலவித சக்திகளுடன் கூடியுள்ள சிவ தத்துவம் உண்மையில் ஒன்றே சக்தி வியாபார பேதத்தால் அதற்கு இத்தகைய (சதாசிவ தத்துவம் போன்ற) வேறுபாடுகள் கூறப்படுகின்றன (2, 13)

பரமசிவம் என்னும் பெயர் கொண்ட தத்துவம் உண்மையில் ஒன்றே. அது கருத்தாவாகையால் சேதனப் பொருள். சேதனத்தன்மை கொண்டதால் அது மாறுபாடு அடையும் தன்மையற்றது. இந்தச் சிவத்துடன் உள்ள சக்தியும் ஒன்றே. ஆனால் தொழில் வேறுபாட்டால் இச்சக்தி பலவிதமானதாகக் கொள்ளப்படுகிறது. இந்தச் சக்திகளின் செயலால் சிவனுக்குச் சதாசிவம் முதலிய பேதங்கள் கூறப்படுவது உபசாரத்திற்காகவே ஒழிய உண்மைக்கல்ல சிவனுக்குச் சதாசிவம் முதலிய பேதங்கள் ஆன்மாக்கள் தியானம் செய்து உய்வதற்காகவே அன்றி வேறல்ல.

தத்துவம் என்பது உண்மையில் ஒன்றுதான்; அத்துவிதமானதுதான்.

34. அந்தப்பிரபு சித்துக்கும், சடத்துக்கும் அனுக்கிரகம் செய்வதற்காக, சதாசிவம் முதலிய உருவங்களைச் செய்து, அனுதியான ஆணவ மலத்தால் மறைக்கப்பட்ட சக்திகளையுடைய ஆன்மாக்களுக்கு அனுக்கிரகத்தைச் செய்கிருர் (2, 14)

சிவவடிவாயிருந்து அனுதி மலத்தினுல் மறைக்கப்பட்ட பசுக்களுக்கும், பாசங்களுக்கும் அனுக்கிரகம் செய்வதற்காகவும், தியானத்திற்கு ஏற்ப உருக்கொள்வதற்காகவும், பரமசிவன் சதாசிவம் முதலிய சரீரங்களை அதிட்டிக்கிருர். ஆன்மாக்கள் அனுதியான மலத்தினுல் தடுக்கப்பட்ட சக்தியுடையவர்களாக இருப்பது தான் பரமசிவன் அனுக்கிரகம் செய்வதற்குக் காரணமாகிறது.

35. பெருங்கருணைப் பொருளான சம்பு ஆன்மாக் களுக்குப் போக, மோட்சத்தையும், சடசமூகத் திற்குத் தன்தன் தொழிலில் சாமர்த்தியத் தையும் அருளுகிறார். (2, 15)

போகம் சுக துக்கங்கள் வடிவிலானது; மோட்சம் நித்தி யானந்த வடிவானது. துக்கமும் இறுதியில் மோட்சத்திற்கே இட்டுச் செல்வதால் அதுவும் ஓர் அனுக்கிரகம் தான். தட்சன் முதலியவர்களைத் தண்டித்ததன் மூலம் தட்சன் சிவனைக்குறித்துத் தியானம் செய்ய முன்வந்தான். ஆகவே இறைவன் தரும் தண்டனையும் அனுக்கிரகத்திலேயே போய் முடிகிறது.

36. இந்தச் சித்து சடங்களுக்கு அனுக்கிரகம் என்பது சிவனுக்குச் சமானமான ரூபமான மோட்சமாகும். கன்மத்திற்கு அநாதித் தன்மையுள்ளதால் கன்மத்தை அனுபவித்துத் தீர்த்தாலொழிய மோட்சம் சித்திப்பதில்லை. (2; 16)

அனுபவிக்கப்படாத கன்மங்கள் கற்பகோடி காலங்களானாலும் போகாவென்னும் நியாயத்தினால், போகானுபவம் கன்ம நாசத்தைக் கொடுத்து மோட்சத்திற்கு வழிகோலுகிறது. மோட்சத்தை அருளுவதுதான் இறைவனின் முக்கியமான அனுக்கிரகம். பாச நீக்கத்தாலும், எல்லாப் பொருள்களிடத்தும் உள்ள ஞானக்கிரியா சக்திரூபமான சிவத்தன்மையின் விளக்கத்தினாலும் உண்டாகும் சிவசமமான ரூபமான மோட்சம் என்பது சிவ சாயுஜ்யம் எனப்படும்.

37. ஆதலால் விபு (பரமசிவன்) அந்தக் கன்மத்தின் பயனாகிய போகத்தின் பொருட்டுத் தனுகரண புவனங்களின் சிருட்டியைச் செய்கிறார். கருத்தா இல்லாமல் காரியமில்லை; அதே போன்றும் தற்காரணமும், கரணமும் இன்றிக் காரியம் இல்லை. (2,17)

கன்மத்தை அனுபவித்துத் தீர்ப்பதற்காக இறைவன் உடலைத் தருகிறார். இவ்வுடல் தூலம், சூக்குமம் என இரு வகைப்படும். கரணமும் அகம், புறம் என இருவகைப்படும். கன்மேந்திரியங்கள் ஐந்து, ஞானேந்திரியங்கள் ஐந்து எனப் பத்து வகைப்படும் புறக் கரணங்கள். மனம், அகங்காரம், புத்தி என மூவகைப்படும் அகக்கரணங்கள் புவனங்கள் பல. இவையாவும் போகத்திற்காக ஏற்பட்டன.

தனுகரணம் என்னும் பதத்தால் சிறப்பான சூக்கும சரீர சிருட்டியும், புவனம் என்னும் பதத்தால் பொதுவான புவனங்களின் சிருட்டியும், பொதுவும் சிறப்புமான புவனத்தில் தோன்றும் சரீர சிருட்டியும் கொள்ளப்படும்.

இச்சிருட்டி அனந்தர் வாயிலாகச் செய்யப்படுகிறது.

குறிப்பு: 38வது சுலோகத்தை மூன்றும் அத்தியாயத்தின் தொடக்கமாகக் கொள்கிறுர் ஸ்ரீகுமாரர். ஆனுல் அகோர சிவாசாரியார் அத்தியாயப் பிரிவு எதுவும் கொள்ளவில்லை. மேலும் அகோரசிவாசாரியார் முன் சுலோகத்தை பூர்வ பட்ச சுலோகமாகக் கொண்டு இச் சுலோகத்தை அதற்கு விடையாகக் கொள்கிறுர்.

38 சிவனுக்குச் சக்திகள் கரணமாகவும், சூக்கும மாயை முதற்காரணமாகவும் கொள்ளப்படு கின்றன. இம்மாயை ஒன்ருயும், நித்தியமா யும், வியாபகமாயும், தோன்றுதல் ஒடுங்குதல் இல்லாததாயும், சிவனிடமிருந்து பிரிக்கக் கூடிய சம்பந்தம் உள்ளதாகவும் உள்ளது. (3;1)

பராசக்தியின் வேறுபாடுகளான இச்சை முதலியன பர மேசுவரனுக்குக் கைகால் போன்று கரணமாக உள்ளன. இம் மாயை, சக்தி ரூபமாய் நின்று முதற்காரணமாதலால் சூக்கும மாய் உள்ளது. ஆகவே பாலீன முதலியவை போன்று கண் ணுக்குத் தெரிவதில்லை. அது கண்ணுக்குத் தெரியாததால் அதை இல்லை எனக்கூடாது. மாயையின் காரியங்களான பிர பஞ்சத்திலிருந்து காரண வடிவான மாயையை ஊகித்து உணர வேண்டும் மாயை சூக்குமம் என்ருல் வடிவற்றது எனப் பொருள்.

இம்மாயை ஒன்றேயாம். பல என்ச் சொல்வதற்குப் பிர மாணமில்லாததால் மாயை ஒன்று. பலவாயும், அசேதன மாயும் இருத்தல் பற்றி மாயை அநித்தியத் தன்மை உடைய தாகி விடும்.

இம்மாயை உற்பத்தி, நாசம் இல்லாமையால் நித்திய மாய் உள்ளது சிருட்டி சங்காரக் கிரமங்கள் நித்தியமாத லால் இம் மாயா சக்தியும் நித்தியமேயாம்.

நித்தியமாதலால், தன் காரியங்களான கலை முதலிய அனைத்துக்கும் அது வியாபகமாக உள்ளது.

ஸ்ரீகுமாரர் 'சிவா சோக்தா' என்ற பாடம் கொள்கிருர். அகோரசிவர் 'சிவாசக்தா' என்ற பாடம் கொள்கிருர். சிவா என்ற சொல்லைக் குணசம்பந்தமில்லாத சுத்தப்பொருள் என ஸ்ரீகுமாரர் விளக்குகிருர். ஆனுல் 'சிவாசக்தா' என்ற சொல்லுக்கு 'சிவனிடமிருந்து பிரிக்கக்கூடியசம்பந்தம்' என்று கூறுகிருர் அகோர சிவாசாரியார் சித்சக்தி சிவனுடன் ஒன்றியது என்றும், மாயை பரிக்கிரகசக்தியாக நிற்கிறது என்றும் அகோர சிவாசாரியார் விளக்குகிருர். இந்தப்பாடபேதம் உள்ளதென்பதை ஏற்று இதை வேறுவிதமாக விளக்குகிருர் ஸ்ரீகுமாரர்.

39. இந்த மாயா சக்தியானது புருஷர் (ஆன்மா) களுக்குப் பொதுவாயும், எல்லாப் புவனங் கட்குக்காரணமாயும், எல்லாமக்களின் கன்மங் களுடன் கூடினதாயும், மோகத்தையுண்டு பண்ணுகிறதாயும் உள்ளது. (3, 2)

இந்த மாயையானது எல்லாப் பிராணிகளுடைய சரீர இந்திரியங்களாகப் பரிணமித்து, எல்லோருக்கும் போக்யமாக விருப்பதால் மாயை பொதுவென்று சொல்லப்படுகிறது. இம்மாயை கன்ம வசப்பட்டவர்களை மட்டும் பாதிக்குமே ஒழிய விடுதலையடைந்த ஆன்மாக்களைப் பாதிக்காது. மாயை எல்லாப் புவனங்களுக்கும் காரணம் எனக்கூறியதால் இது தேகம் முதலியவற்றிற்கும் காரணமாகும் இம்மாயை தன் சட்டத்தன்மையினுல் ஆன்மாவை மூடி, அநித்தியமாயும், அசுத்தமாயும், துக்கமாயும் காணப்படும் ஆன்மாவுக்கு அப் பாற்பட்டபொருட்களில் ஆன்மாவின் தோற்றத்தை உண்டு பண்ணுவதால் இது மோகத்தை உண்டு பண்ணுகிறது எனச் சொல்லப்படுகிறது.

40. சம்பு கன்மங்களை அனுசரித்துத் தன்னுடைய சக்திகளால் மாயையைக் கலக்கி ஆன்மாக்கள் தோறும் போகத்திற்காகச் சரீரங்களையும, கரணங்களையும் தோற்றுவிக்கிறார். (3, 3)

பரமசிவன் பிரளயகாலத்தில் பக்குவமடைந்த ஆன்மாக்களின் கன்மங்களை அறிந்து, கன்மத்திற்குப் பொருத்தமான சரீர இந்திரியங்களையும், சப்தம் போன்ற விஷயங்களையும் தன் இச்சை போன்ற சக்திகளால் அந்த ஆன்மாக்களின் போகத்தின் பொருட்டு, மாயையைக் கலக்குகிறார் (உற்பத்திக்கு எதிர்முகமாகச்) செய்கிறார். அந்த மாயையைத் தழுவி ஆன்மாக்கள் தோறும் வெவ்வேறான தூலசரீரங்களையும் இந்திரிய சமூகங்களையும், பொதுவான புவனம் முதலியவைகளையும் தோற்றுவிக்கிறார்.

41. பலவிதமான சக்திகளைக் கொண்ட மாயை முதலில் கால தத்துவத்தைத் தோற்றுவிக்கிறது. காலம் உலகை இறந்த, நிகழ், எதிர் காலங்களாகப் பிரிக்கிறது. (3, 4)

குடத்தைச் செய்யவிரும்பும் குயவன் ஒருவன் முதலில் சக்கரம் போன்றவற்றைச் செய்வது போல, மாயை முதலில் காலத்தை உருவாக்குகிறது. மாயையை அனந்தேசுவரர் கலக்குவதால்தான் காலம் உருவாகிறது. மாயை காலமாகும் போது, அது பால் தயிராவது போல முற்றுன பரிணுமம் அல்ல. நெய் புழுவாகப் பரிணமிப்பது போன்று, ஒரு பகுதிப் பரிணுமமே. சில ஆகம நூல்களில் கலை, வித்தை, ராகம் இவற்றிற்குப் பின்னரே காலதத்துவம் உருவாவதாகக் கூறப்படுகிறது. இது தொழிற்படும் முறையையொட்டிக் கூறியது. ஆனுல் தோன்றும் முறையில் காலமே முதலில் தோன்றுகிறது.

இக்காலம் தார்க்கிகர் போன்ருேர் கொள்வது போன்று நித்தியமல்ல. காலம் மூன்ருகப் பிரிக்கப்படுவதால் அது அநித்தியமே. காலம் ஞானத்தால் பிரிக்கப்படுகிறது.

42 நியமனத்தைச் சொரூபமாக உடையது நியதி. இது காலதத்துவத்திற்குப்பின் மாயையிலிருந்து உண்டாகிறது. எல்லா உலகையும் இது நியமனம் செய்வதால் இது நியதி தத்துவம் எனப்படுகிறது, (3, 5)

அரசனது ஆணை இல்லாவிட்டால் உழவுத்தொழிலால் விளையும் நெல்லை உரியவர் அல்லாமல் யாரோ அனுபவிப்பர் அதுபோல எள்ளிலிருந்து எண்ணெய், நெல்லிலிருந்து அரிசி என்ற நியதி இருப்பது நியதி தத்துவத்தால்தான். நியதி இல்லாவிட்டால் ஒருவன் செய்த கன்ம பலனை வேறொருவர் முறையின்றி அனுபவிக்க நேரிடும். கன்மங்களின் ஒழுங்கு முறைக்காகவே நியதி ஏற்பட்டது.

கன்மமே ஏன் இந்த நியதியைச் செய்யக்கூடாது என்றால் எல்லாமே எல்லாம் செய்யலாம் என்றாகிவிடும். சிவசக்தியே நியமனப் பொறுப்பையும் ஏற்கட்டுமே என்றால், சிவசக்தி ஒரு தத்துவத்தின் வழியாகத்தான் நியமனம் செய்ய முடியும் இல்லாவிட்டால் சிவசக்தி ஒன்றே எல்லாம் செய்துவிடும், மற்ற தத்துவங்களே தேவையில்லை என்றாகிவிடும்.

43. அதன் பின்னர் (நியதிக்குப் பின்னர்) மாயை யிலிருந்து கலையென்னும் தத்துவம் தோன்று கிறது. இந்தக்கலை ஆன்மாக்களுடைய மலத் தைச் சற்றே விலக்கிக் கிரியா சக்தியை விலக் குகிறது ஆகவே தான் இது கலை எனப்படு கிறது. (3, 6)

கால நியதி தத்துவத்திற்குப் பிறகு மாயையிலிருந்து கலாதத்துவம் தோன்றுகிறது. இக்கலையினால் பசுக்களின் ஆணவமலம் ஓரிடத்தில் ஒன்று சேர்ந்து பசுக்களின் கிரியா சக்தி தெளிவடைகிறது. மலத்தினால் மறைக்கப்பட்டுப் போகானுபவத்திற்கு உரிமையில்லாத ஆன்மாக்களின் போகானுபவத்தின் பொருட்டு மலத்தைச் சிறிது விலக்கித் தொழிற்செய்யும் சக்தியை (கிரியா சக்தியை) விளங்கும்படி செய்வதும் கலைதான். இவ்விளக்கமே கலை உண்டென்பதை ஊகிப்பதற்குள்ள சான்று.

44 முக்கியத்துவத்தை இழந்த கால தத்துவத்தினாலும், நியதி தத்துவத்தினாலும் இந்தக் கலையானது தன் தொழிலைப் பூமிவரை செய்கிறது. (3, 7)

காலம், நியதி ஆகியவற்றின் துணையுடன் மாயை பூமிவரை செயலாற்றுவதற்குத் துணையாகவிருப்பது கலை. கலை என்னும் தத்துவம் போகத்தை அனுபவிக்கும் ஆன்மாவின் சொரூபத்திற்கு உதவியாக இருப்பதால் அந்தரங்க சாதனமாகும். இது அந்தரங்க சாதனமாக இருப்பதால் முக்கியத்துவம் பெற்றதாகிறது. காலம் முதலியவையோ எனில், வெளிச்சாதனமாக இருப்பதால் முக்கியத்துவம் இல்லாது போகிறது.

45. கிரியா சக்தியின் விளக்கத்தையுடைய ஆன் மாக்களுக்கு விஷயங்களை அறிவிப்பதற்காகக் கலா தத்துவமே ஒளிவடிவான வித்தியா தத் துவத்தைத் தோற்றுவிக்கிறது. (3, 8)

ஆன்மாக்களின் விஷய அனுபவத்திற்காகக் கலை வித்தியா தத்துவத்தை உண்டாக்குகிறது, வித்தியா தத்துவத்தின் ஒளித்தன்மை காரணமாக அதுவிஷயங்களை அறிவிப்பதாகக் கூறப்படுகிறது.

கலா தத்துவத்திலிருந்து ராகம், வித்தை என்னும் இரண்டு தத்துவங்களும், மூலப்பிரகிருதியும் உண்டாவதாக இரௌரவ ஆகமம் கூறுகிறது.

வேறு சிலர் மாயையிலிருந்தே வித்தியா தத்துவம் உரு வாவதாகக் கூறுகிறார்கள்.

46. இவ் வித்தியா தத்துவமானது தன் தொழிலால் ஞான சக்தியின் மறைப்பைக் கிழித்து விஷயங்களிலிருந்து உண்டான கரணத்தைக் காட்டுகிறது. இது (வித்தியா தத்துவம்) ஆன்மாவுக்கு உயரரிய சாதனமாகும். (3, 9)

இந்த வித்தியா தத்துவம் தன் வல்லமையால் ஞான சக்தியின் மறைப்பைக் கிழித்து ஆன்மாவுக்கு விஷய சமூகத்தைக் காட்டுகிறது. இவ்வித்தியா தத்துவம் சம்சார மார்கத்தில் ஆன்மாக்களுக்கு உயரரிய கரணமாகும்.

கலையென்னும் தத்துவத்தினால் ஆணவமலத்தின் மறைப்பு சிறிது நீங்கி ஆன்மாவின் ஞான சக்திக்கு விளக்கம் உண்டாகிறது. எனினும், ஞானசக்தி, கரணம் இன்றி விஷயத்தை அறிய முடியாது. ஆகவே இவ்வித்தியா தத்துவம் ஞான சக்திக்குக் காரணமாக நின்று தன் வல்லமையால் ஞானசக்தியின் மறைப்பை நீக்கி விஷயங்களை அறியும்படி செய்கிறது.

விஷயங்களை அறிவதற்குப் புத்தி முதலிய கரணங்கள் மட்டும் போதா. புத்தி முதலியவை வெளிச்சாதனங்கள். இவ்வித்தியா தத்துவமே அந்தரங்க சாதனம். இது சுக துக்கங்களின் உணர்வு விஷயத்தில் ஆனமாவுக்குக் கரணமாக நிற்கிறது.

47. புத்தி, சுக துக்க ரூபமான போக்கியப் பொருளாக இருக்கும் போது வித்தியா தத்துவம் ஆன்மாவுக்குக் கரணமாக இருக்கிறது. விஷயத்தைக்கிரகிப்பதில் புத்தியானது கரணமாக இருக்கிறது. (3, 10)

மனத்தாலே செலுத்தப்பட்ட கண் முதலிய இந்திரியங்களால் அறியப்படும் விஷயங்களைப் புத்தியானது சந்தேகமின்றி நிச்சயிக்கும். புத்தியால் உறுதிப்படுத்தப் பட்ட விஷயங்களையே ஆன்மா பற்றுகிறது. ஆனால் புத்தியையே விஷயமாகக் கொண்ட அறிவில், புத்தியே விஷயமாகிவிடுவதால், அப்புத்தியை அறிவதற்கு வேறொரு கரணம் தேவை. இதற்காகவே வித்தியா தத்துவம் கற்பிக்கப் படுகிறது.

48 பற்றுதலைக் காரணமாகக் கொண்ட ராக தத்துவமானது விஷயங்களின் வேறுபாடின்றியே புருஷனைக் கவர்வதற்குக் காரணமாகிறது. இது புத்தியின் தருமங்களைக்காட்டிலும் வேறாயுள்ளது. எல்லாப் பற்றுகளுக்கும் பொதுவாய் உள்ளது. (3, 11)

பற்றுதல் ராகதத்துவத்தின் விளைவாதலால், 'பற்றுதலைக் காரணமாகக் கொண்ட ராக தத்துவம்' எனப்பட்டது. பொருள்களின் குணங்களோ, வைராக்கியமின்மை என்னும் புத்தி தருமமோ ஆன்மாவின் பற்றுதலுக்குக் காரணமாவதில்லை ராகதத்துவமே பற்றுதலுக்குக் காரணம். இந்த ராக தத்துவமானது எல்லாப் பொருள்களிடத்தும் உண்டாகும் பொதுவான பற்றுதலுக்குக் காரணமாதலால், பொதுவாய் உள்ளதாகக் கூறப்படுகிறது.

49. இந்தத் தத்துவங்களால் வியாபிக்கப் பட்ட ஆன்மா போகம் அனுபவிக்கும் நிலையை அடையும்போது புருஷன் எனப்படுகிறது; தத்துவங்களிடையே எண்ணப் படுகிறது. (3, 12)

புருஷன் சேதனப் பொருளாதலால், சடப்பொருள்களான தத்துவங்களிடையே புருட தத்துவத்தை எண்ணுவதும், வியாபகமாகவுள்ள புருடனை ராகதத்துவம் போன்றவற்றிற்குப் பிறகு எண்ணுவதும் எவ்வாறு பொருந்தும்? கலை, வித்தை, ராகம், காலம், நியதி ஆகிய ஐந்து தத்துவங்களோடு கூடிய அணுவான ஆன்மா, போகத்தை அனுபவிக்கும் போது, புருடன் எனப்படுகிறது. உண்மையில் புருடனுக்குத் தத்துவமாயிருக்கும் தன்மை கிடையாது. கால, நியதி, கலை, வித்தியை, ராகம் முதலிய ஐந்து தத்துவங்களின் தொடர்பால் ஈசுவரன் பசுவாவது போன்று அவ்யக்தம் போன்ற இருபத்து நான்கு தத்துவமயமான இடத்தில் இருப்பதால் அது புருஷனுகிறது எனவும் கூறலாம்.

தீட்சையில் பிரகிருதி தத்துவ சுத்தியின் பின் புருடத் தன்மை என்னும் மலம் சுத்தம் செய்யப்படுவதால் இங்கு ராகதத்துவத்தின் பின்னர் புருடதத்துவம் எண்ணப் படுகிறது.

குறிப்பு : ஸ்ரீ குமாரர் 50வது சுலோகம் முதல் நான்காம் அத்தியாயத்தின் தொடக்கமாகக் கொள்கிறார். அகோர சிவாசாரியார் வழக்கம் போல அத்தியாயப் பிரிவில்லாமல் உரை எழுதுகிறார்

50. புருஷனுடைய போகத்திற்காகக் கலை என்னும் தத்துவமே, ராகதத்துவத்தின்பின் அவ்யக்தம் (பிருகிருதி) என்னும் தத்துவத்தைத் தோற்றுவிக்கிறது. வெளிப்படாத (சத்துவம் முதலிய) குணங்களோடு கூடியிருப்பதாலும், விளக்க முடியாதிருப்பதாலும் அது அவ்யக்தம் எனப் படுகிறது. (4,1)

ஸ்ரீகுமாரர், அகோர சிவாசாரியாரிடையே பாடபேதம் காணப்படுவதால், கலையிலிருந்து அவ்யக்தம் தோன்றுவதாக அகோர சிவாசாரியாரும், மாயையிலிருந்து அவ்யக்தம் தோன்றுவதாக ஸ்ரீகுமாரரும் விளக்குவர்.

சாத்துவிகம், இராசதம், தாமசம் என்னும் முக்குணங்களே அவ்யக்தமாகும்; இதுவே புத்தி முதலியவற்றிற்குக் காரணம் எனச் சாங்கியர் கூறுவது பொருந்தாது. சத்துவம் முதலிய முக்குணங்கள் சடமாயும், அநேகமாயும் இருத்தலால், அவற்றிற்கு வேறான காரணம் முன்னிருந்து அந்தக் காரணத்திலிருந்தே இக்குணங்கள் தோன்ற வேண்டுமென்பதே முறை சாங்கியர்கள் கூறுவதுபோல இந்த அவ்யக்தம் நித்தியப் பொருளாகாது.

51. பிரகாசம், பிரவிருத்தி, நியமம் என்னும் வடிவான சத்துவ, இராசத, தாமசமென்னும் குண தத்துவமானது அவ்யக்தம் என்னும் தத்துவத்திலிருந்து தோன்றுகிறது. சுகதுக்க ரூபமாகவும், மோக ரூபமாகவும் இக்குண தத்துவம் விளங்குகிறது. (4, 2)

சமமான குணங்களையுடைய அவ்யக்தத்திலிருந்து, ஒன்றுக்கொன்று மாறுபட்ட நிலைகளுள்ள குணதத்துவம் தோன்றுகிறது. சத்துவ குணம் நிர்மலமாயிருப்பதால் பிரகாச வடிவானது; இராசத் குணம் செயல்திறம் உடையதாகையால் பிரவிருத்தி வடிவானது. வலுவாக இருப்பதால் நிலை பெற்றிருந்து, நியமம் என்னும் வடிவாயுள்ளது தாமச குணம். சாத்துவிக குணம் சுகத்தையும், இராசத குணம் துக்கத்தையும், தாமச குணம் மோகத்தையும் உண்டு பண்ணுகிறது.

52. சப்தம் முதலிய விஷயங்களின் நிச்சய அறிவு ரூபமான புத்தி தத்துவம், முக்குணங்களான குண தத்துவத்திலிருந்து தோன்றுகிறது. காரியத்தை அனுசரித்தும், சத்துவம் முதலிய குணங்களாலும் அந்தப் புத்திதத்துவம் மூன்று விதமாகச் சொல்லப்படுகிறது. (4, 3)

முக்குணங்களால், நிச்சயமான அறிவு உண்டாகிறது. அறிவு, வேதம் என்றும் ஸ்மிருதி என்றும் இருவகைப்படும். அறிவு, சவிகல்பம் நிர்விகல்பம் எனவும் இருவகைப்படும். சவிகல்பம் ஐந்து வகைப்படும்.

புருஷனுடைய காரிய ரூபத்தால் சத்துவ குணம் அதிகப்படும் போது சாத்துவிகி என்றும், இராசத குணம் அதிகமாகும் போது இராசசி என்றும், தாமச குணம் அதிகமாகும் போது தாமசி என்றும் மூன்று விதமாகிறது. இந்தப் புத்திக்குத் தருமம், ஞானம், வைராக்கியம், ஐசுவரியம், அதருமம், அஞ்ஞானம், அவைராக்கியம், அநைசுவரியம் என்ற எண் குணங்களும், சித்தி முதலிய ஞானபேதங்களும் உண்டு.

53. அந்தப் புத்திதத்துவத்திலிருந்து, ஜீவனகங்காரம், சம்பிரமபாகங்காரம், கருவாகங்காரம் என மூன்று விதமாக அகங்காரம் தோன்றுகிறது சுத்தமான ஆன்மாவுக்கு இந்த அகங்கார தத்துவத்தினுடைய சேர்க்கையால் விஷய விவகாரத்தன்மை கிட்டுகிறது. (4, 4)

நான் உயிர் வாழ்கிறேன் என்னும் உணர்வு ஜீவனகங்காரம். நான் செய்கிறேன் என்னும் உணர்வு சம்பிரம்பாகங்காரம். நான் வலுவுள்ளவன் என்னும் உணர்வு கருவாகங்காரம்.

ஆன்மா நிர்குணன்; நிஷ்கிரியன்; சின்மாத்திரன்; உதாசீன இயல்பினன். ஆகவே ஆன்மா கேட்காது, பார்க்காது; பேசாது செய்யாது. அகங்காரத்தின் தொடர்பால் ஆன்மாவுக்கு இவ்வறிவுகள் தோன்றுகின்றன.

இவ்விதமான அகங்காரம் புத்தி தத்துவத்திலிருந்து தோன்றுகிறது.

54. இந்த அகங்கார தத்துவமானது சாத்துவிகம், இராசதம், தாமசம் எனனும் பேதத்தால் மூன்று விதமாகத் தோனறுகிறது. பின்னும் இந்த அகங்கார தத்துவமே தைசதம், வைகாரிகம், பௌதிகம என்னும் பெயர்களால் சொல்லப் படுகிறது. (4,5)

சத்துவம் அதிகப்பட்டுள்ள அகங்காரம் தைசதம் என்றும், இராசதம் அதிகப்பட்டுள்ள அகங்காரம் வைகாரிகம் என்றும், தாமசம் அதிகமாகவுள்ள அகங்காரம் பௌதிகம் என்றும் கூறப்படுகிறது.

ஸ்ரீகுமாரர், சத்துவம் அதிகப்பட்டுள்ள அகங்காரத்தை வைகாரிகம் என்றும், இராசதம் அதிகப்பட்டுள்ளதை தைசதம் என்றும், தாமசம் அதிகப்பட்டுள்ளதை பௌதிகம் என்றும் கூறுகிறார்.

55. தைசத அகங்காரத்திலிருந்து மனமும், வைகாரிக அகங்காரத்திலிருந்து கன்மேந்திரியங்களும், பௌதிக அகங்காரத்திலிருந்து தன்மாத்திரைகளும் தோன்றுகின்றன. (4,6)

தைசத அகங்காரத்திலிருந்து மனமும், கண், காது, மூக்கு நாக்கு, தோல் என்னும் ஞானேந்திரியங்களும் தோன்றும். வைகாரிக அகங்காரத்திலிருந்து வாக்கு, கை, கால், ஆசனம், குறி என்னும் கன்மேந்திரியங்கள் தோன்றும். பௌதிக அகங்காரத்திலிருந்து சப்தம், பரிசம், ரூபம், ரசம், காந்தம் என்னும் தன்மாத்திரைகள் ஐந்தும் தோன்றும்.

ஸ்ரீகுமாரர் வேறுவிதமாக விளக்குகிறார். அவரது விளக்கத்தின்படி, தைசதத்திலிருந்து மனம் உண்டாகிறது. வைகாரிகத்திலிருந்து பத்து இந்திரியங்கள் உண்டாகின்றன. பௌதிகத்திலிருந்து தன் மாத்திரைகள் உண்டாகின்றன. வேறு சிலர் தைசதத்திலிருந்து மனமும், சத்துவத்தின் துணையுடன் கூடிய வைகாரிகத்திலிருந்து புத்தி இந்திரியங்களும், தாமசத்தின் துணையுடன் கூடிய வைகாரிகத்திலிருந்து கன்மேந்திரியங்களும் தோன்றுவதாகக் கூறுவர்.

56. மனம் என்னும் தத்துவம் இச்சை வடிவானது. அந்த மனத்திற்குச் சங்கற்பம் என்பது தொழிலாக நிகழ்கிறது. செவியும், தோலும், கண்ணும், நாக்கும், நாசியும் ஞானேந்திரியங்களாகும். (4, 7)

இச்சை வடிவென்பது, பிரார்த்தனை வடிவானது என விளக்கலாம். அந்த மனதின் தொழில் சங்கற்பம். சங்கற்பம் என்றால் ஒரு பொருளைப் பற்றுந்தன்மை.

தனக்கு வேறான விஷயங்களில் பற்றுள்ள ஆன்மாவினுடைய கண் முதலிய பொறிகளுக்குக் குடம் முதலிய புலன்களோடு சேர்க்கை இருந்த போதிலும், ஒரு நிலைக்களமில்லாமல் செயற்பாடு இல்லை. அந்நிலைக்களமே மனம் என்னும் தத்துவம்.

57. அந்த ஞானேந்திரியங்களுக்குச் சப்தமும், பரிசமும், ரூபமும், ரசமும், கந்தமும் அறியத் தக்கவை. (4, 8)

புத்தி இந்திரியங்களான காது முதலிய ஐந்திற்கும் இங்குக் கூறப்பட்ட சப்தம் போன்ற ஐந்தும் விஷயங்களாகின்றன. காதுக்குச் சப்தம் விஷயம். இதுபோல் தோலுக்குப் பரிசம்; கண்ணுக்கு ரூபம்; நாவுக்கு ரசம்; நாசிக்குக் கந்தம் விஷயங்களாகும்.

58. சப்தம் முதலியவற்றை அறியும் அறிவு, இந்த ஞானேந்திரியங்களுக்கு முறையே தொழில்களாகச் சொல்லப்படுகின்றன. வாக்கு, பாதம், கை, ஆசனம், குறி என்னும் இவை கன்மேந்திரியங்களாகும். (4,9)

சொல்லையும், ஒலியையும் காதின்றி அறிய முடியாது. சீதோஷ்ணம், மிருது, கடினம், திரவம், கூர்மை முதலியவற்றைத் தோலின்றி அறிய முடியாது. வெள்ளை முதலியவற்றைக் கண்ணின்றி அறிய முடியாது. இனிமை முதலியவற்றை நாக்கின்றி அறிய முடியாது. நறுமணம் முதலியவற்றை மூக்கின்றி அறிய முடியாது. இவையே இவற்றின் தொழில்கள்.

இந்திரியங்கள் பூதங்களின் விளைவுகள் அல்ல. அப்படியிருந்தால் கண் அக்கினியின் குணமான ரூபத்தை மட்டுமே அறிய முடியும். அப்படியல்லாது அக்கினியையும், வேறு பூதங்களையும், அவற்றின் குணங்களையும், கன்மம், சாதி என்னும் இவைகளையும் கண் அறிகிறதால் இந்திரியங்கள் பௌதிகமல்ல.

59. பேசுதலும், ஏற்றலும், போதலும், மலநீக்குதலும், ஆனந்தம் அனுபவித்தலும் ஆகிய இவை கன்மேந்திரியங்களுடைய தொழில்களாம். அந்தக் கரணம் என்பது புத்தி, அகங்காரம், சித்தம் என மூன்று வகைப்படும். (4,10)

வாக்கு முதலிய கரணங்களின்றிப் பேசுதல் முதலிய இக் காரியங்கள் முடியாதாகையால், கன்மேந்திரியங்களைத் தார்க்கிகர் ஒத்துக் கொள்ளாதது முறையில்லை. இந்தக் கன்மேந்திரியங்கள் ஒவ்வொன்றுமே உடல் முழுதும் வியாபித்துள்ளன எனலாம். புருவங்களை அசைத்தல் உண்மையில் கையின் தொழிலாகும்.

அந்தக் கரணத்தைப் புத்தி, அகங்காரம், சித்தம் என மூன்றாகப் பிரிப்பர் சிலர். அல்லது ஒவ்வொரு அந்தக் கரணத்தையும் மும்மூன்றாகப் பிரிக்கலாம். இறந்த காலத்தைச் சார்ந்தவை, நிகழ் காலத்தைச் சார்ந்தவை, எதிர் காலத்தைச் சார்ந்தவை என ஒவ்வொன்றும் மூவகைப்படும்.

60. வெளியிந்திரியமானது கன்மேந்திரியம், ஞானேந்திரியம் என்னும் பிரிவால் பத்து விதமாகி-றது. தன்மாத்திரைகளிலிருந்து ஆகாயம், வாயு, அக்கினி, நீர், மண் என்னும் ஐந்து பூதங்கள் தோன்றுகின்றன. (3, 11)

ஐந்து புத்தி இந்திரியங்கள், ஐந்து கன்மேந்திரியங்கள் எனவெளிக்கரணங்கள் பத்துவிதமாகும். கன்மேந்திரிய, புத்தி இந்திரியங்களைக் கொண்ட வெளியிந்திரியங்கள் தங்கள் தொழிற்பாடு காரணமாக மூன்று விதங்களாகின்றன. பிராணன் போன்றவற்ருல் அந்தக் கரணம் சரீரத்தைத் தாங்குகிறது, புத்தி இந்திரியங்கள் ஒளி கொடுக்கின்றன, கன்மேந்திரியங்கள் தொழிற் படுத்துகின்றன.

61. சப்தம் முதலியவற்றினுடைய சூக்கும ரூபங்கள் ஐந்து தன்மாத்திரைகளாகக் கூறப்படுகின்றன. அந்தத் தன்மாத்திரைகளிலிருந்து ஒவ்வொரு குணத்தின் மிகுதி காரணமாக முன் கூறப்பட்ட ஆகாயம் முதலிய பஞ்ச பூதங்கள் தோன்றுகின்றன. (4, 12)

சப்த தன்மாத்திரையிலிருந்து சப்தத்தை மட்டும் குணமாகக் கொண்ட ஆகாயம் தோன்றுகிறது. சப்த தன்மாத்திரையும் பரிச தன்மாத்திரையும் கூடுவதால் சப்தமும் பரிசமும் கொண்ட வாயு உண்டாகிறது. இவ்விரு தன்மாத்திரைகளுடன் ரூப தன்மாத்திரை கூடுவதால் சப்த, பரிச, ரூபம் ஆகிய மூன்று குணங்கள் கொண்ட தேஜஸ் தோன்றுகிறது. இந்தத் தன்மாத்திரைகள் மூன்றுடன் ரச தன்மாத்திரை கூடுவதால் சப்த, பரிச, ரூப, ரச குணங்கள் கொண்ட தண்ணீர் உண்டாகிறது. இவற்றுடன் கந்த தன்மாத்திரை கூடுவதால் சப்த, பரிச, ரூப, ரச, கந்த குணங்கள் ஐந்து கொண்ட பிருதுவி உண்டாகிறது. இவற்றை வேறு விதமாக விளக்கு வாரும் உளர்.

62. ஆகாசம் முதலிய பூதங்களுக்கு முறையே இடம் கொடுத்தல், வெவ்வேறான பொருட் களைத் திரட்டுதல், பாகஞ் செய்தல், கெட்டிப் படுத்துதல், பாரங்களைத் தரித்தல், ஆகியவை தொழில்கள். (4,13)

இடம் கொடுத்தல் ஆகாசத்தின் தொழில். பொருள் களைச் சேர்ப்பது வாயுவின் தொழில். பலவற்றைத் தாங்குதல் வாயுவின் தொழில் என்றும் விளக்கலாம். பாகஞ் செய்தல் (பக்குவப் படுத்தல்) அக்கினியின் தொழில் கெட்டிப் படுத்து தல் அல்லது நனைத்தல் தண்ணீரின் தொழில். பொருட்களைத் தரிப்பது பூமியின் தொழில்.

ஆகாசம் வேறு; இடைவெளி (space) வேறு. ஆகாசம் அநித்தியமான பொருள்.

குறிப்பு: ஸ்ரீகுமாரர் 63 வது சுலோகம் முதல் ஐந்தா வது அத்தியாயத்தின் தொடக்கமாகக் கொள்கிறார் ஆகோர சிவாசாரியார் அத்தியாயப் பிரிவு எதுவும் கொள்ளவில்லை

63. இந்தப் பத்துவிதமான பூதம், தன்மாத்திரை என்பன காரியமாக யிருக்கின்றபடியால் இந்தி ரியங்களோடு சேர்ந்து தொழிற் படுகின்றன. இந்திரியங்களுக்குத் (தாமாக) சாமர்த்தியம் இல்லாததால் (இந்தப் பத்துக்) காரியங்களை ஆதாரமாகக் கொண்டு தொழிற் படுகின்றன. (5,1)

பூதங்களே இந்திரியங்களுக்கு ஆதாரமாக இருக்கட்டும், தன்மாத்திரைகள் வேண்டாம் எனக் கருத வேண்டாம். இப்பத்தும் இந்திரியங்களுக்குத் தூலமாகவும், சூக்குமமா கவும் ஆதாரங்களாகவுள்ளன.

64. முதலாவதான ஐந்து தத்துவங்கள் சித்துக்கு உதவும் தன்மை கொண்டதால் சித்திறேடு தொடர்புடையவை. ஏனைய ஏழு தத்துவங் களும் இரு வேறு தொடர்புடையவையாகச் சைவ சாத்திரங்களில் கூறப்படுகின்றன.

(5, 2)

சிவ, சக்தி, சதாசிவ, ஈசுவர, வித்தியா தத்துவங்களுக்குச் சித்துடன் தொடர்பு. மாயா, கால, நியதி. கலா, வித்தியா, ராக. புருஷன் ஆகிய தத்துவங்களுக்கு சித்துடனும், அசித்துடனும் தொடர்பு.

முதலாவதான சுத்த தத்துவம் ஐந்தும் சிவத்தினுடைய சர்வஞ்ஞத்துவம், சர்வகருத்திருத்துவம் என்னும் இவறறின் பிரகாசத்திற்குக் காரணமாக இருத்தல் பற்றி உயிருக்கு உபகரித்தலால் சிவத்தைப்போல் சுத்தங்கள். இவை சேதனமெனக் கொள்ளக்கூடாது.

ஏனைய அசுத்த தத்துவங்களான மாயை முதல் புருட தத்துவம் வரையிலுள்ள ஏழுதத்துவங்களும் உயிருக்கு உபகரித்தலாலும், சுக, துக்க, மோகத்தை உண்டுபண்ணுதலாலும் சித்தினுடனும், அசித்தினுடனும் சமானமாயிருத்தல் பற்றி சிதசித்து எனப்படும்.

65. அவ்யக்தம் முதலிய எல்லாத் தத்துவங்களுக்கும் குண சமபந்தத்தால் சுக துக்க மோக வடிவாயிருத்தல் பற்றி (அசுத்தத்துடன்) தொடர்பு. இறுதியிலுள்ள பத்தில் பின்னர்ச் சொல்லப்படுவது விசேடமாகும். (5, 3)

சித்துடன் தொடர்பில்லாத அவ்யக்தம் முதலியவை புறங்கள். சுகதுக்க மோகவடிவால் குணங்களுடன் தொடர்புட்டவை. இவை அசுத்தத்தோடு ஒத்தல் பற்றி அசுத்தம் எனப்படும்,

66. (பூதங்களும், தன்மாத்திரைகளும்) சப்தம் முதலிய குணங்களின் ஒற்றுமையாலும், காரியம் என அழைக்கப்படுவதாலும் தொடர்புடையவை. சில சிறப்பாக அங்காங்கித் தொடர்புடையவை. (5, 4)

இங்குக் கூறப்பட்ட எல்லாத் தத்துவங்களுள்ளே விந்து மாயை முதலிய சில தத்துவங்கள் காரணமாயிருத்தல் பற்றி அங்கியாகவுள்ளன. சக்தி முதலிய தத்துவங்கள் காரியமாயிருத்தல் பற்றி அங்கமாகவுள்ளன. அங்கியென்பதை முக்கியமென்றும், அங்கமென்பதை முக்கியமற்றதென்றும் கூறலாம்.

67. எல்லாத் தத்துவங்களுக்கும் உற்பத்திக்கிரம மாக இருப்புக் கூறப்பட்டது. உற்டத்தியாகும் போது இங்குக் கூறப்பட்டமுறையில் உற்பத்தி யாகும் இவை ஒடுங்கும் போது மாறுபட்ட நிலையில் மாயையில் ஒடுங்குகின்றன. (5, 5)

பிருதிவி முதலிய தத்துவக் கூட்டங்கள் இவ்வாறு தன் காரணங்களில் நிலைப்பட்டு உற்பத்தியாகின்றன். பிறகு தன் தன் காரணங்களில் முறையே ஒடுங்கி, எல்லாம் மாயையில் ஒடுங்குகின்றன.

68. மாயைக்கு மேற்பட்ட, கலையுடன் கூடிய சுத்தாத்துவா சக்தியில் ஒடுங்குகிறது. அச் சக்தியும் எல்லாவற்றையும் உடைய சிவனில் இரண்டறக் கலந்து நிற்கிறது (5, 6)

இங்குச் சக்தியென்பது மகாமாயை எனப்படும். கந்தத்தில் பூமியும், ரசத்தில் ஜலமும், ரூபத்தில் அக்கினியும், பரிசத்தில் வாயுவும், சப்தத்தில் ஆகாசமும், தாமச அகங்காரத்தில் தன்மாத்திரைகளும், இராசத அகங்காரத்தில் கன்மேந்திரியங்களும், சாத்துவிக அகங்காரத்தில் ஞானேந்திரியங்களும், மனமும், புத்தியில் மூவகையான அகங்காரங்களும், குணங்களில் புத்தியும், குணசமூகம் அவ்யக்தத்திலும் (பிரகிருதியிலும்), ராகம், வித்தை என்பவை கலையிலும், புருடதத்துவம், காலம், நியதி, கலை என்பவை மாயையிலும், அம்மாயை வித்தியேசுவரரிடமும், வித்தியேசர் சதாசிவரிடமும், சதாசிவர் சக்தியிடமும், சக்தி சிவனிடமும், சிவதத்துவம் விந்துடமும் ஒடுங்குகின்றன.

மாயைக்குச் சிவனிடம் பிரிக்க முடியாத தொடர்பில்லை.

69. மகாபிரளயத்தில் மாயை, ஆன்மா, சிவம் என்னும் மூன்றும் எஞ்சி நிற்கின்றன, திரும்பவும் அவை முன்போலச் சிருட்டியில் தொழிற்படுகின்றன. (5, 7)

இங்குக் கூறப்படுவது மகாபிரளயம். இது தவிர மத்தியப் பிரளயம் ஒன்று உண்டு. இப் பிரளயத்தில் வித்தியேசுவரர்களும் முத்தியடைந்து, மூன்று மட்டும் எஞ்சி நிற்கின்றன. இங்கு மாயை என்பது அசுத்தமாயை, சுத்த மாயை இரண்டையும் குறிக்கும். ஆன்மா என்பது மல சம்பந்தமுடைய எல்லா ஆன்மாக்களையும் குறிககும். சிவம் என்பதால் சிற்சக்தியோடு கூடிய சிவமும், முத்தான்மாக்களும் கொள்ளப்படுவர்.

திரும்பவும் முன்னர்க் கூறப்பட்ட முறையில் உற்பத்தி தொடங்கும்.

70. சம்சாரத்தில் துன்பமடைந்த அநேக உயிர்களுக்கு இளைப்பு நீங்குவதன் பொருட்டும், கன்மத்தின் பரிபாகத்தின் பொருட்டும், பரமசிவன் கிருபையினால் மகாபிரளயத்தைச் செய்கிறார். (5,8)

எல்லா ஆன்மாக்களின் இளைப்பு நீக்கத்தின் பொருட்டும், கன்மங்களின் பரிபாகத்தின் பொருட்டும், இடைவிடாமல் அளவற்ற சரீரங்களைத் தோற்றுவித்துச் சக்தி குறைந்த சுத்த மாயை, அசுத்த மாயை ஆகியவற்றிற்குச் சக்தியை உண்டு பண்ணுவதற்காகவும் இறைவன் மகாபிரளயத்தைச் செய்கிறார்.

குறிப்பு: ஸ்ரீகுமாரர் 71ம் சுலோகத்தை ஆறுவது அத்தியாயத்தின் துவக்கமாகக் கொள்கிறார். அகோரசிவாசாரியார் வழக்கம் போல அத்தியாயப் பிரிவில்லாமல் உரை எழுதுகிறார்.

71. உயிர்களிடத்து வைத்த கருணையால் திரும்பவும் இவ்வுலகில் சிருட்டியைச் செய்து அந்த உயிர்களுடைய கன்மங்களைப் பழுக்கச் செய்து பக்குவப் படுத்துகிறார் பரமசிவன். (6,1)

கருணை கொண்ட இறைவன் உயிர்களுக்குக் கன்ம அனுபவத்திற்காகத் தனு, கரணம் முதலியவைகளைப் படைக்கிறார். இச்சிருட்டி முக்தியின் பொருட்டேயாம்.

72. போகத்தால் கன்மத்தை நாசம் செய்து, தீட்சையென்னும் பெயருடைய தன் சக்தியால் கருணைக் கடலான பரமசிவன் எல்லா உயிர்களையும் விடுவிக்கிறார். (6, 2)

அனுபவத்தால் கன்மத்தைப் பக்குவப்படுத்தி, உரிய காலத்தை எதிர் நோக்கியுள்ள இறைவன், சக்திநிபாதம் செய்து, ஆசாரியனாகித் தீட்சை கொடுத்து உயிர்களை உய்விக்கிறார்.

உடனே முக்தி தரக்கூடிய சக்தியோடு நிருவாண தீட்சை கூடும் போது நிகழ்ந்து கொண்டிருக்கும் சரீரத்திற்குக் காரணமாயும், பயனைத்தருவதாயுமுள்ள பிராப்த கன்மத்திற்கும் நாசம் உண்டாகிறது.

தீட்சை நைட்டிகம் முதலிய பல வகைப்படும்.

73. எது எல்லா உயிர்களுக்கும் போகத்தைக் கொடுத்துக் கொண்டு பிரளயகாலம் வரை உள்ளதோ, அது தத்துவம் என்று கூறப்படுகிறது. இதனால் சரீரம், பானை முதலியன தத்துவமாக ஆவதில்லை. (6, 3)

நேராகவோ, தொடர்ச்சியாகவோ எது உயிர்களுக்குப் போகத்தைக் கொடுத்துக் கொண்டு, பிரளய காலம் வரை உள்ளதோ அதுவே தத்துவம். இவ்வாறில்லாதது தத்துவமாகாது.

புருஷனுக்குத் தத்துவமாகும் தன்மை உண்மையில் இல்லை என முன்னரே கூறப்பட்டது.

74. தத்துவத்திற்குக் காரணமாகவும், பூரணம் செய்வதாகவும் எது உள்ளதோ அதிலிருந்து தான் தத்துவங்கள் தோன்றுகின்றன. எல்லாத் தத்துவங்களும் இவ்வாறு வரையறை செய்யப் பட்டன. (6, 4)

சிவன் முதல் அவனி வரையிலான எல்லாத்தத்துவங்களுக்கும் உள்ள நிலை கூறப்பட்டது. இவற்றிற்கெல்லாம் காரணமாகவுள்ள நிஷ்களரூபமான சிவதத்துவமும் கூறப்பட்டது. சிவதத்துவமே அனைத்தையும் நிரப்பிப் பூரணம் செய்வது.

75. தத்துவங்களின் எல்லாவிதமான உண்மை-களும் இந்நூலில் எளிதாகக் கூறப்பட்டன. இத்தகைய தத்துவப் பிரகாசம் என்னும் நூலைப் போஜதேவமன்னன் செய்தான். (6, 5)

தத்துவப்பிரகாசம் என்பதற்குத் தத்துவங்களின் ஒளி அல்லது ஞானம் எனப்பொருள். தத்துவங்களின் உண்மையான இயல்பை அறிவிப்பதால் இது இப்பெயர் பெற்றது.

எங்கிருந்து எவ்வாறு கலை முதலியவை உற்பத்தியா-கின்றன? சிவனின் விருப்பத்தால் விந்துவிடமிருந்து அவை உற்பத்தியாகின்றன.

76. போஜதேவருடைய மனத்தில் எல்லாத்தத்துவ சமூகங்களும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் பிரகாசித்தன. அத்தகைய போஜதேவர் சிவாகமங்களின் சாரமான ஒப்பற்ற தத்துவப் பிரகாசம் என்னும் நூலைச்செய்தார்.